விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

புகைத்தலை தவிர்ப்போம்

இராகம் 01 | தாளம் 29 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 15 திங்கட்கிழமை (30.07.2012) | பக்கங்கள்: பதினாறு

# வடபகுதி டாக்டர்களின் இன்றைய பணிப் பகிஷ்கரிப்பு நிறுத்தம்

## யாழ்.ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் அவசரமாக கொழும்புக்கு அழைக்கப்பட்டதன் எதிரொலி

யாழ்.போதனா வைத்தியசாலை உட்பட வட மாகாணத்திலுள்ள அனைத்து அரசாங்க ஆஸ்பத்திரிகளிலும் இன்று நடைபெறவிருந்த வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்பு கைவிடப்பட்டுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் யாழ்.கிளைத் தலைவர் டாக்டர் எஸ்.நிமலன் தெரிவித்தார். ஊழல் மற்றும் மோசடிக் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருக்கும் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் பவானி பசுபதிராஜாவை மேலதிக விசாரணைகளுக்கென அவசரமாகக் கொழும்பு வருமாறு நேற்று சுகாதார அமைச்சு அழைப்பு விடுத்ததையடுத்தே பணிப் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டதாகவும் டாக்டர் நிமலன் தெரிவித்தார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் தொடர்பாக நடத்தப்பட்ட ஆரம்பகட்ட விசாரணைகளின்போது மோசடி செய்தவர்கள் பற்றிய உண்மைகள் வெளியாகியிருந்தன. இந்த விசாரணையை தொடர்ந்து நடத்துமாறு கோரி வட மாகாண வைத்தியர்கள் கடந்த 24ஆம் திகதி பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் தொடர்ச்சியாக இன்று திங்கட்கிழமை முதல் வடமாகாண வைத்தியர்கள் தொடர்ச்சியாகப் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுவர் என்று அரச மருத்துவ அதிகாரிகளின் தாய்ச் சங்கம் கடந்த வியாழக்கிழமை நடத்திய கூட்டத்தில் முடிவெடுத்திருந்தது. இந்த நிலையிலேயே குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருக்கும் மூவரில் ஒருவரான டாக்டர் பவானி பசுபதிராஜா விசாரணைகளுக்கென கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

வெறுமனே விசாரணை நடத்திவிட்டு மீண்டும் அதேபதவியை வகிக்குமாறு ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் டாக்டர் பவானி 02

## கடலில் தத்தளித்த 28 இலங்கையர் கடற்படையால் மீட்பு

காலி கடலிலிருந்து 300 மைல்களுக்கு அப்பால் பழுதடைந்த நிலையில் தத்தளித்துக் கொண்டிருந்த படகொன்றில் பயணித்த இலங்கையைச் சேர்ந்த 28 சட்டவிரோதப் புகலிடக் கோரிக்கையாளர்கள் இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்டதாக கடற்படைப் பேச்சாளர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக கிடைத்த தகவலையடுத்து, குறித்த இடத்திற்குச் சென்ற கடற்படையினர் அவர்களை நடுக்கடலில் தத்தளித்த 28 பேரையும் மீட்டுவந்து பொலிஸாரிடம் ஒப்படைத்ததாக கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர்கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

# அரியாலையில் காந்தி சிலை தகர்ப்பு போதை தலைக்கேறிய இருவர் கைது

அரியாலையில் மகாத்மா காந்தி சனசமூக நிலையத்துக்கு முன்னால் உள்ள காந்தி சிலை நேற்றுமுன்தினம் இரவு சரிந்து வீழ்ந்தது.

இச்சிலைக்கு முன்னால் மாலை வேளைகளில் ஆட்கள் கூடுவது வழக்கம். நேற்றுமுன்தினம் இரவு குடிபோதையில் இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலின்போது காந்தி சிலையில் பொருத்தப்பட்டிருந்த கைத்தடியை மற்றக் குழுவினருக்குத் தாக்குதவற்காக இன்னொரு குழுவினர் இழுத்தபோது காந்தி சிலை சரிந்து விழுந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் மேற்படி காந்தி சிலையை இராணுவத்தினரே உடைத்ததாக கதை கட்டிவிடப்பட்டதாகவும் 02



அரியாலையில் உடைக்கப்பட்ட காந்தி சிலை

## புனர்வாழ்வு பெற்ற 247 பேருக்கு இன்று சுயதொழில் கடன்

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் புலி உறுப்பினர்கள் 247 பேருக்கு இன்று சுயதொழில் செய்வதற்கான கடனுதவிகள் வழங்கப்படும். இன்று பிற்பகல் இரண்டு மணிக்கு அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையில் நடைபெறும் நிகழ்வில் இவர்களுக்கான காசோலைகள் வழங்கப்படும். புனர்வாழ்வு அதிகார சபையினால் 02

## இந்திய மீனவர்களின் நுழைவால் யாழ். மீனவர்கள் மத்தியில் குழப்பம்

இந்தியாவின் தமிழக மீனவர்கள் இலங்கையின் வடபகுதி கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடிப்பதால் யாழ்குடா நாட்டு மீனவர்கள் மத்தியில் குழப்பநிலை தோன்றியுள்ளது.

இதனைக் கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென யாழ்.கடற்றொழிலாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் சமாஜத் தலைவர் எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.

தமிழக மீனவர்களின் இழுவைப் படகுகளும், நாட்டுப் படகுகளும் நாளாந்தம் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றன. இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் நாம் தெரியப்படுத்தியுள்ளோம் 02

## துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டு 4 நாட்களின் பின் தப்பிவந்த மாணவன்

### யாழ்ப்பாணத்திருந்து திருமலை திரும்பும் வழியில் சம்பவம்

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மேலதிக வகுப்புக்குச் சென்று திரும்பும் வேளையில் அனுராதபுரம் கெப்பித்திகொல்லாவ பிரதேசத்தில் வைத்து இனந்தெரியாதோரால் மாணவர் ஒருவர் கடத்தப்பட்டுள்ளார்.

கடத்தப்பட்ட மாணவனான கிண்ணியாவைப் பிறப்பிடமாகவும், திருகோணமலை மத்திய வீதியில் வசித்து வருபவருமான முகம்மது ஹஸ்ஸாலி முகம்மட் (வயது 19), என்பவர் திருகோணமலை சென்.ஜோசப் கல்லூரியில் உயர்தர விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்று வருபவர். இவர் கடந்த 23ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து மேலதிக வகுப்பை முடித்துவிட்டு திரும்பி வவுனியா பேருந்து நிலையத்தையடைந்து, அங்கிருந்து திருகோணமலை பஸ்ஸின் ஊடாக ஊருக்கு திரும்பிக் கொண்டிருக்கும் வேளையில் பஸ் வண்டி இடையில் பழுதடைந்துள்ளது. இதனால் அம் மாணவன் பெற்றோருக்கு கையடக்கத் தொலைபேசியூடாக வரும்போது பஸ் வண்டி பழுதடைந்துள்ளதாக தெரிவித்துள்ளார். 02

## கொழும்பில் இந்திய ‘ஷோ’

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான வர்த்தக வாய்ப்புக்களை மேலும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக இலங்கைக்கான இந்திய பிரதி உயர் ஸ்தானிகர் குமரன் தெரிவித்தார்.

இதன் ஒரு அங்கமாக 02

## உணவுச் சட்டத்தில் திருத்தம்: நவம்பர் முதலாம் திகதி அமுல்

1980ஆம் ஆண்டில் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திருத்தங்கள் நவம்பர் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் என்று சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையின் பேரில் இச் சட்டத்தின் உணவு பொதியிடல், தயாரித்தல், உற்பத்தி செய்தல், விநியோகித்தல், 02

# பட்டதாரிகளை தூண்டி வீதிக்கு இறக்க எதிர்க்கட்சிகள் சதி

## சுய இலாபத்துக்காக சிலர் ஊடகங்கள் வாயிலாக பொய் பிரசாரம். - அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த



பட்டதாரிகள் நியமனத்திற்கும் நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலுக்கும் எந்தவித தொடர்புகளும் கிடையாது என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர், அமைச்சர் சுசில் பிரேமஜயந்த திட்டவட்டமாக தெரிவித்தார்.

பட்டதாரிகளின் நியமனத்தை பயன்படுத்தி சில பட்டதாரிகளை வீதிக்கு இறங்கச் செய்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுத்த எதிர்க்கட்சிகள் முயற்சிப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

தற்பொழுது வழங்கப்படும் பட்டதாரிகள் நியமனங்களானது தேர்தலுக்காக வழங்கப்படும் நியமனம் அல்ல.

வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதிலும் 15 ஆயிரம் பட்டதாரிகளை நியமிப்பதற்கு அரசாங்கம் ஏற்கனவே அமைச்சரவையிலும், பாராளுமன்றத்திலும் அறிவித்து அனுமதிபெற்றுள்ளது. இந்த நியமனத்தை பல்வேறு துறைகளில் வழங்கிக் கொண்டிருக்கும் நிலையிலேயே மாகாண சபை தேர்தல் அறிவிக்கப்பட்டது எனவே இந்த நியமனத்திற்கும் தேர்தலுக்கும் எந்தவித தொடர்புகளும் கிடையாது.

மாற்றமாக அரசியல் இலாபத்துக்காக சிலர் பத்திரிகைகள் ஊடாக பொய்யான தகவல்களை வெளியிட்டு வருகின்றனர்.

அதே போன்று மின்சார திருத்த பணிகள் காரணமாக சில தினங்கள், சில மணித்தியாலங்கள் மின்சாரத்தை துண்டிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனையும் எதிர்க்கட்சிகள் அரசியலாக்க முற்பட்டனர். ஆனால் தற்பொழுது மின் விநியோகம் சீராக இடம்பெற்று வருகின்றது என்றார்.

மகாவலி கேந்திரத்தில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் மன்னார் விஜயம்

நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று சனிக்கிழமை மன்னாருக்கு விஜயம் செய்துள்ளார்.

மன்னார் உப்புக்குளம் பகுதியில் உள்ள பள்ளிவாசல் ஒன்றில் அந்தப்பகுதி மீனவ மக்களையும், ஏனையோரையும் அவர் சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்தார்.

இந்தச் சந்திப்பின்போது கலகத்தில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 13 பேரையும் விடுதலை செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று அவர்களது குடும்பத்தினர் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். சர்ச்சைக்குரிய கோந்தைப்பிட்டி மீன்பிடி துறைக்கும் சென்று அமைச்சர் பார்வையிட்டுள்ளார்.

## துப்பாக்கி முனையில்...(தொடர்)

இதனையடுத்து பெற்றோரும் இரவு நேரமாக இருப்பதால் வவுனியா திரும்பி பள்ளிவாசல் ஒன்றில் தங்கி நின்று மறுநாள் காலையில் வீடு திரும்புமாறு கூறியுள்ளனர். மறுநாளாகியும் மேற்படி மாணவன் வீடு திரும்பாததினால் அவனின் பெற்றோர் அவரோடு சென்ற நண்பர்களிடம் விசாரித்த போது, அவர் வவுனியாவிலிருந்து திருகோணமலை நோக்கி வந்ததாக தெரிவித்துள்ளனர்.தொடர்ந்து நான்கு நாட்களாக வீடு திரும்பாத இவரை தேடும் பணியில் வீட்டார்கள் ஈடுபட்டனர். எனினும் அம்மாணவன் திருகோணமலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்றுக்கு கையைக் காட்டியுள்ளார். லொறியும் நிறுத்தப்பட்டு அம்மாணவனை ஏற்றிக்கொண்டு சென்று கொண்டிருந்த வேளையில் இடையில் லொறி நிறுத்தப்பட்டு அம் மாணவனை கீழே இறங்குமாறு லொறிச் சாரதி கேட்டுள்ளார். அம் மாணவன் இறங்கிய போது அவ்விடத்தில் இருந்த மூவர் மாணவனின் பயணப் பொதியைப் பறித்து அதன்பின்பு மாணவனை தாக்கியுள்ளனர். பதிலுக்கு மாணவனும் அவர்களைத் தாக்கியுள்ளார். பின்னர் தலையில் துபபாக்கியை வைத்து மிரட்டி காட்டுக்குள் அழைத்துச் சென்று, பாழடைந்த வீட்டுக்குள் அடைத்து வைத்து இரு கைகளையும் கட்டி உணவு எதுவும் கொடுக்காமல் நான்கு நாட்களின் பின்னர் கை கட்டை அவிழ்த்துள்ளனர். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த மாணவன் தனது பெல்ட்டை கழற்றி கடத்திய ஒருவர் மீது தாக்கியுள்ளார். ஏனைய இருவரும் துப்பாக்கியோடு வந்தபோதும் அவர்களையும் தாக்கியுள்ளார்.

அதன் போது அவர்களிடமிருந்த துப்பாக்கி கீழே விழவே, அவர்கள் அங்கிருந்து ஓட மாணவன் கடத்தல்காரர்களின் கையடக் கத் தொலை பேசியையும் எடுத் துக் கொண்டு காட்டு வழியூடாக வந்து கெப்பித்தி கொல்லாவ பிரதான வீதியை யடைந்து மரம் ஒன்றின்கீழ் இருப்பதாக கடத்தல் காரர்களின் தொலைபேசியினூடா வீட்டாருக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து ஏற்கனவே இவரை தேடிய மூன்று வாகனங்களில் ஒன்று குறிப்பிட்ட வீதியினூடாக தேடிய போது, மரம் ஒன்றின் கீழ் இம் மாணவன் மயக்கமுற்ற நிலையில் இருப்பதை கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணியளவில் கண்டுபிடித்து உடனடியாக கெப்பித்திகொல்லாவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்ததன் பின்னர் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

தற்போது இம் மாணவன் கெப்பித்திகொல்லாவ வைத்தியசாலையிலிருந்து திருகோணமலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## பல்கலை அனுமதி:

# அறிக்கை தயாரானதும் ஜனாதிபதியிடம் கையளிப்பு

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கமைய, பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அது விரைவில் ஜனாதிபதி அவர்களிடம் கையளிக்கப்படுமெனவும் உயர் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் நவரட்ண தெரிவித்தார்.

வருடந்தோறும் ஆகக்குறைந்தது சுமார் 22 ஆயிரத்து 110 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கப்படுவது வழமை இருப்பினும் இம்முறை பழைய மற்றும் புதிய பாடத்திட்டங்களுக்கமைய இஸட் புள்ளிகள் கணிக்கப்பட்டுள்ளமையினால் இவ்வருடம் வழமையிலும் சற்று அதிகமான மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு சேர்த்துக்கொள்ளப்படுவரெனவும் அவர் கூறினார்.

இதேவேளை 2010இல் க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற

## புனர்வாழ்...(தொடர்)

நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் இவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தலா இரண்டு இலட்ச ரூபா இவர்களுக்கு வழங்கப்படும்.

## வடபகுதி ...(தொடர்)

யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டால் என்ன செய்வீர்கள்? என்று டாக்டர் நிமலனிடம் கேட்டபோது, தொடர்ச்சியான பணிப் பகிஷ்கரிப்புத் தொடருமெனப் பதிலளித்தார்.

## இந்திய மீனவர்களின்...(தொடர்)

எனினும், அத்துமீறிய மீன்பிடி தொடர்ந்தும் இடம்பெறுவதால், யாழ். குடாநாட்டு மீனவர்கள் மத்தியில் குழப்பநிலையைத் தோற்றுவித்திருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

நேற்று நடைபெற்ற நிர்வாகக் குழுக்கூட்டத்தில் கலந்துகொண்ட சுழிபுரம், காரைநகர், நெடுந்தீவு மற்றும் வேலணை ஆகிய பிரதேச மீன்பிடி சமாஜ பிரதிநிதிகள் தமது இடங்களில் தொடர்ந்தும் இந்தியப் படகுகளின் மீன்பிடி தொடர்வதாகச் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதனைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரியிருந்ததாக அவர் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பில் பல தடவைகள் அமைச்சர்கள், அரச அதிபர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளோம். மீண்டும் ஒரு தடவை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு இவ்விடயத்தைக் கொண்டு சென்றுள்ளோம்.

இந்திய மீனவர்களின் விவகாரம் பற்றி மீன்பிடி அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாக வட பிராந்திய மீன்பிடித் திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் உறுதிமொழி வழங்கியிருப்பதாகவும் எமிலியாம் பிள்ளை குறிப்பிட்டார்.

இந்த நிலையில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியைத் தடுக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

## கொழும்பில் இந்திய...(தொடர்)

எதிர்வரும் ஓகஸ்ட் 3ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்தியன் ஷோ' வர்த்தகத் தொழில்துறை கண்காட்சி அமைந்துள்ளது என அவர் தெரிவித்தார்.

இந்தியாவில் முன்னணியிலுள்ள 100 இற்கும் அதிகமான தொழில் நிறுவனங்கள் இது

கண்காட்சியில் கலந்துகொள்ளவுள்ளன. பொறியியல் துறை, விவசாய உற்பத்தி, இலத்திரனியல் உற்பத்தி, கணனித் தொழில்நுட்ப நிறுவனங்கள் உட்பட பல நிறுவனங்கள் இதில் கலந்துகொள்ளவிருப்பதாக பிரதி இந்திய உயர் ஸ்தானிகர், கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

2011 ஆம் ஆண்டில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் 486 பில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தகம் நடைபெற்றுள்ளது. இதில் 550 மில்லியன் டொலருக்கு இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதி நடைபெற்றுள்ளது. 4.4 பில்லியன் டொலர் பெறுமதியான பொருட்கள்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருப்பதாக பிரதி உயர்ஸ்தானிகர் சுட்டிக்காட்டினார். இலங்கையின் முதலீடுகளில் இரண்டாவது கூடுதல் முதலீடு செய்யும் நாடாக இந்தியா அமைந்துள்ளது.

இலங்கையின் இறக்குமதியிலும் இந்தியா முக்கிய பங்கு வகிக்கிறது. கடந்த வருடம் இலங்கைக்கு வந்த உல்லாசப் பயணிகளில் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் பேர் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர். இலங்கை இந்திய வர்த்தகத்தில் மேலும் அதிகரிப்பை ஏற்படுத்த 'இந்தியன் ஷோ' வர்த்தகக் கண்காட்சி பேருதவியாக இருக்கும் எனப் பிரதி இந்தியத் தூதுவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தக் கண்காட்சிக்கு மேலதிகமாக இந்தியாவின் வர்த்தகத் துறை அமைச்சர் உள்ளிட்ட அமைச்சர்கள் குழு இந்திய வர்த்தகக் குழு என்பன இலங்கை வருகின்றன.

இக்குழுவினர் இலங்கையில் காணப்படும் முதலீட்டு வாய்ப்புகள் பற்றி ஆராய்வார்கள். கண்காட்சி நடைபெறும் ஓகஸ்ட் மூன்றாம் திகதி முதல் 5 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வர்த்தகக் கருத்தரங்குகள், கம்பனிகளின் பிரதம நிறைவேற்று அதிகாரிகளின் மாநாடு என்பனவும் நடைபெறும்.

## உணவுச் சட்டத்தில்...(தொடர்)

களஞ்சியப்படுத்துதல், வாகனங்களில் எடுத்துச் செல்லுதல் ஆகிய விடயங்களில் திருத்தங்கள் செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக அவ்வதிகாரி மேலும் குறிப்பிடுகையில், உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சரின் ஆலோசனையின் பேரில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அவற்றில் உணவு சட்டத் திருத்தமும் ஒன்றாகும்.

இச் சட்டத் திருத்தத்தின்கீழ் உணவு பழுதடையக் கூடிய கைத்தொழிற்சாலைகள் அமைந்துள்ள இடங்களிலும், வெள்ளம் ஏற்பட்டுள்ள பிரதேசங்களிலும் உணவு உற்பத்தியும், தயாரிப்பும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

அதே நேரம் உணவு விற்பனை செய்யும் ஹோட்டல்கள், சிற்றுண்டிச் சாலைகளில் தொற்று நோய்களுக்கு உள்ளாகாதவர்கள் கடமையாற்றுவதை அவற்றின் உரிமைகள் உறுதிப்படுத்துவதும் இத் திருத்தத்தின் கீழ் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், ஹோட்டல்கள் மற்றும் சிற்றுண்டி சாலைகளில் மக்கள் உணவு உட்கொள்ளும் போது அவர்களுக்கு உணவு பரிமாறுபவர்கள் இருமக் கூடியவர்களாகவும், தும்மக் கூடியவர்களாகவும், மூக்குகளில் விரல்களைப் போடக் கூடியவர்களாகவும் இருக்கக் கூடாது.

இதேபோல் பொதுமக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய என்னும் பல திருத்தங்கள் இச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவ்வதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

# 20 புலி சந்தேக நபர்களுக்கு எதிராக ஆறு மாத காலத்தினுள் வழக்கு

போர் குற்றங்களை புரிந்ததாக கூறப்படும், புலிகள் இயக்க சந்தேக நபர்கள் 20 பேருக்கு எதிராக 6 மாதங்களுக்குள் பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் அவசரகால விதிகளின் கீழ் வழக்குத் தொடுக்கப்படும் எனவும் இதன்மூலம் கைதிகளின் நிச்சயமில்லாத் தன்மைக்கு முடிவு வரும் எனவும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுஹத கம்லத் தெரிவித்துள்ளார்.

மேற்படி கைதிகளில் 20 பேர் பொதுமக்கள் மற்றும் பொருளாதார இலக்குகள் மீது பாரிய குண்டுத்தாக்குதல்களை நடத்தியமை, அரசியல் தலைவர்களை படுகொலை செய்தமை, தற்கொலை குண்டுதாரிகளுக்கு பயிற்சியளித்தமை மற்றும் தாக்குதல்களில் ஈடுபடுத்தியமை உட்பட போர் குற்றங்களை புரிந்ததை நிரூபிப்பதற்கு ஆதாரங்கள் உள்ளதாக சுஹத கம்லத் தெரிவித்தார்.

தமிழ்க் கைதிகளை நாம் மூன்று வகையாக பிரித்துள்ளோம். கடும்போக்கு எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்களைத் தவிர, சிறு குற்றங்களை புரிந்த 150 பேர் அடுத்த வாரம் புனர்வாழ்வுக்கு அனுப்பப்படுவர் எனவும் அவர் கூறினார்.

ஏனையோர் எல்.ரி.ரி.ஈ.யின் அச்சுறுத்தல்கள் காரணமாக வேறு வழியில்லாததால் எல்.ரி.ரி.ஈ. இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள். தாம் போராளிகளாக சேர்க்கப்படுவதற்கு சம்மதித்திருக்காவிட்டால் தமது குடும்பத்தினர் அனைவரும் எல்.ரி.ரி.ஈ.யினரால் கொல்லப்பட்டிருப்பர் என விசாரணை அதிகாரிகளிடம் இவர்கள் தெரிவித்துள்ளனர். எனவே அவர்களை தயவுடன் நடத்த நாம் தீர்மானித்துள்ளோம் என அவர் தெரிவித்தார்.

எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள் சிலர், எல்.ரி.ரி.ஈ.யின் சர்வதேச வலையமைப்புடன் தொடர்பு கொண்டிருப்பதாலும் அரசாங்கம் அளித்த புனர்வாழ்வுக்கான வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள மறுத்ததாலும் விசாரணைகள் இலகுவாக இருக்கவில்லை எனவும் சுஹத கம்லத் கூறினார்.

## கறுப்பு பட்டியல் நிறுவனங்கள்:

# ஒன்பது ஓமான் நிறுவனங்களில் இலங்கையர்கள் பணியாற்றத் தடை

ஓமான் 9 நிறுவனங்கள் இலங்கையர்களை ஊழியர்களாக இணைக்க ஓமானிலுள்ள இலங்கைத் தூதரகம் தடைவிதித்துள்ளது. இலங்கை ஊழியர்களை ஏமாற்றிய குற்றச்சாட்டின் காரணமாக இந்நிறுவனங்கள் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 14 நிறுவனங்களுடனான செயற்பாடுகளை இலங்கைத் தூதரகம் நிறுத்திக் கொண்டுள்ளது.

கறுப்புப் பட்டியலில் உள்ளக்கப்பட்டுள்ள நிறுவனங்களில் 7 ஆடைத் தயாரிப்பு மற்றும் ஏற்றுமதி நிறுவனங்களும் அடங்கும். அத்துடன் 3 ஆடைத்தயாரிப்பு மற்றும் ஏற்றுமதி நிறுவனங்கள், 4 ஆட்சேர்ப்பு நிறுவனங்கள், 3 சந்தைப்படுத்தல் நிறுவனங்கள் மேலும் 4 நிறுவனங்களுடனான தனது செயற்பாடுகளை, ஓமான் தொழிலாளர் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டின் காரணமாக இலங்கைத் தூதரகம் நிறுத்தியுள்ளது.

ஊழியர்களுக்கு சம்பளம் வழங்காமை, ஊழியர்களை ஒழுங்கீனமாக நடத்துதல், சம்பளம் குறைக்கப்பட்டமை போன்ற பல முறைப்பாடுகள் இந்நிறுவனங்களுக்கு எதிராக தெரிவிக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தூதுவர் அசோக கிரிஹகம கூறினார்.

இந்நிறுவனங்கள் கறுப்புப் பட்டியலில் இருக்கும் காலத்தில் இலங்கை ஊழியர்களை சேர்த்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் அந்நிறுவனங்களின் பிரதிநிதிகள் இலங்கைக்கு பயணம் செய்ய விஸா வழங்கப்பட மாட்டாது எனவும் அவர் கூறினார்.

# ஒரு கிராமத்துக்கு ஒரு வீடு 161 பேர் விண்ணப்பிப்பு

ஒரு கிராமத்திற்கு ஒரு வீடு திட்டத்தினை பெற்றுக்கொள்ள யாழ்.மாவட்டத்தில் வங்கிகளினூடாக 161 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இவ் வீட்டுத்திட்ட கடனுதவியாளர்களுக்கு 67.8 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியூடாக விண்ணப்பித்த 74 பேருக்கு 31.9மில்லியன் ரூபாவும் இலங்கை வங்கியூடாக விண்ணப்பித்த 87 பேருக்கு 35.9 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதில் மக்கள் வங்கியூடாக விண்ணப்பித்தவர்களில் 38 பேர் புதிய வீடுகளுக்காகவும் 36 பேர் தரமுயர்த்துதலுக்காகவும் விண்ணப்பித்துள்ளனர். இலங்கை வங்கியூடாக விண்ணப்பித்தவர்களில் 19 பேர் புதிய வீடுகளுக்காகவும், 43 பேர் தரமுயர்த்துதலுக்காகவும் விண்ணப்பித்துள்ளார்கள்.

2012 டிசெம்பர் மாதத்திற்குள் புதிய வீட்டினை அமைத்து முடிக்கவுள்ள வீட்டுக் கடனுதவியாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் கடனுதவிகள் வழங்கப்படவுள்ளதாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சம்பூர் அணுமின் நிலையத்துக்கு பாக்.உதவியா? இல்லவே இல்லை

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க

திருகோணமலை சம்பூரில் அணுமின் நிலையமொன்றை அமைப்பதற்கு பாகிஸ்தானின் உதவியை இலங்கை பெறவுள்ளதாக இந்திய ஊடகங்கள் பொய்யான செய்திகளை வெளியிடுவதாக அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

சீனாவின் செல்வாக்கிற்குள் இலங்கையை வைத்திருப்பதற்காக இத்திட்டத்தை பாகிஸ்தான் வடிவமைத்துள்ளதாக 'இந்தியா ருடே' இணையத்தளத்தில் ஜூலை 24ஆம் திகதி குறிப்பிடப்பட்டிருந்தது.

இது குறித்து அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூறுகையில், இத்தீவில் எங்குமே அணுமின் நிலையமொன்றை அமைப்பதற்கு நாம் தீர்மானிக்கவில்லை. அவ்வாறான திட்டத்திற்காக எந்த வெளிநாட்டுடனும் நாம் கலந்துரையாடவில்லை. 'இந்தியா ருடே' யில் வெளியான செய்தி முற்றிலும் பொய்யானது என்றார்.

ஊடகங்கள் பொய்யான செய்திகளை வெளியிடக்கூடாது. குறிப்பாக பாக்.வெளிவிவகார அமைச்சர் விஜயம் செய்யவுள்ள நிலையில் ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றார்.

நாடெங்கிலும் மின்வறியோக அபிவிருத்திக்கான எதிர்கால திட்டங்கள் உள்ளன. இதற்கு நாம் எவரிடமும் அனுமதி பெறத் தேவையில்லை" எனவும் அவர் தெரிவித்தார்.



சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் மாணவர்கள் தமிழ்த்தினப் போட்டியின் விசேடகூத்து நிகழ்ச்சியில் மாகாண மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளனர். சென்றாண்டிலும் விசேடகூத்து நிகழ்ச்சியில் இவர்கள் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. கூத்தில் பங்குகொண்ட மாணவர்களுடன் அதிபர், ஆசிரியர்கள் படத்தில் காணப்படுகின்றனர்.
(படம் : அளவெட்டி நிருபர்)

# கடைகளில் திருட்டு

(வலிகாமம்)

சுன்னாகம் பொலிஸ் பகுதியில் இரண்டு திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்றுளள்தாக சுன்னாகம் நகர வர்த்தகர்களினால் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

சுன்னாகம் காங்கேசன்துறை வீதியில் உள்ள கையடக்கத் தொலைபேசி விற்பனை செய்யும் வர்த்தக நிலையத்தில் இருந்து கையடக்கத் தொலைபேசி ஒன்று திருடப்பட்டுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது.

இதே போன்று மற்றோரு கடையில் பாவனைக்கு வைக்கப்பட்டு இருந்த மின்பிறப்பாக்கியொன்று திருடப்பட்டுள்ளதாகவும் முறையிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட திருட்டுக்கள் சம்பந்தமாக சுன்னாகம் பொலிசார் விசாரனைகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

# தங்க நகைகள் அணிந்து வருவதை தவிர்த்துக்கொள்ள பொலிஸ் எச்சரிக்கை

யாழ்.நல்லூர் உற்சவ காலத்தில் கோவிலுக்கு செல்லும் பக்தர்கள் தங்க ஆபரங்களை அணிந்து செல்வதைத் தவிர்க்குமாறு யாழ்.பொலிஸார் பொதுமக்களுக்கு துண்டுப் பிரசுரம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்.நல்லூர் பகுதிக்கு செல்லும் பக்தர்கள் அதிகளவில் திருடர்கள் இருப்பதினால் தங்கள் உடமைகள் மட்டில் மிகவும் அவதானமாக செயற்படுமாறு பொது மக்களை விழிப்படையச் செய்வதற்காக நல்லூர் பகுதிகளில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தும் ஒட்டியும் வருகின்றனர்.

நல்லூர் உற்சவ காலத்தில் திருட்டுச் சம்பவத்தை கட்டுப்படுத்துவதற்காகவும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் துண்டுப்பிரசுரங்கள் மற்றும் பாதாதைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பேரேரா தெரிவித்தார்.

கொடியேற்றத் திருவிழாவின் போது ஆலயத்திற்கு வந்த பக்தர்களின் 4 தங்கச் சங்கிலிகள் களவாடப்பட்டுள்ளன. இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்ட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் 4 பெண்களும் 3 ஆண்களும் அடங்குகின்றனர்.

நல்லூர் கந்தன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்திற்காக நாட்டில் பல பாகங்களிலும் இருந்து பெருமளவான மக்கள் வருகை தரவுள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி திருடர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டத் தொடங்குவார்.

இதற்காக பல பேர் நல்லூர் சூழலில் வீடுகளை வாடகைக்கு எடுத்து தங்குவதகாக தகவல்கள் கிடைத்துள்ளன.

இந்த நிலையில் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பொலிஸாரால் விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## இன்றைய இராசி பலன் (30.07.2012)

**நந்தன வருடம் ஆடித் திங்கள் 15 ஆம் நாள்**
**திங்கட்கிழமை**

**நட்சத்திரம்** : மூலம் பின்னிரவு 1.11 வரை. அதன் பின் பூராடம்.
**திதி** : துவாதசி பிற்பகல் 2.47 வரை. அதன் பின் திரயோதசி.
**சுபநேரம்** : 12.03 - 1.33
**இராகுகாலம்** : 7.33 - 9.03
(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)

**மேடம்** : பொருள் இலாபம், மனச்சந்தோசம், புதியன பெறுதல்
**இடபம்** : ரோக பயம், பணக்கஷ்டம், யோசனை மிகுதி
**மிதுனம்** : புதிய நட்பு, குடும்ப சுகம், விவாக முயற்சி
**கடகம்** : சத்துரு பீடை, கடன் தொல்லை, வீண் விவாதம்
**சிங்கம்** : பொருள் சேர்க்கை, அந்நியர் உதவி, புத்திரரால் நன்மை
**கன்னி** : வாகன சுகம், தேகசுகக் குறைவு, இல்லத்தில் குழப்பம்
**துலாம்** : காரியத் தடை, சகோதர சஞ்சலம், கொடுக்கல் வாங்கல் பிரச்சினை
**விருச்சிகம்** : பணப்புழக்கம், பொருள் வரவு, வாக்குச் சித்தி
**தனுசு** : மன உளைச்சல், கபால ரோகம், தொழில் மத்திமம்
**மகரம்** : வீண் செலவு, பிரயாணக் கஷ்டம், தூக்கக் குறைவு
**கும்பம்** : மனநிம்மதி, பெரியோர் உதவி, எதிர்பாராத வரவு
**மீனம்** : பணக்கஷ்டம், தொழில் சஞ்சலம், புதிய சிந்தனை

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# கட்டிட திணைக்களம்
# இலங்கை தொழில்நுட்ப சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவி - II ஆம் வகுப்பு "ஆ" பிரிவு

நிர்மாணித்தல், பொறியியற் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சில் மற்றும் கட்டிட திணைக்களத்தில் மேற் கூறிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இவ்அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந் த தகைமைகளை பூரணப்படுத்தப்பட்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து கட்டிட பணிப்பாளர் நாயகத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இவ்அறிவித்தல் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய ஏ4 கடதாசியில் இரு பக்கங்களைப் பாவித்து தயார் செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 2012.08.30 ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ "கட்டிட பணிப்பாளர் நாயகம், கட்டிட திணைக்களம், "செத்சிரிபாய", பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் . விண்ணபத்தினை அனுப்பும் தபால் உறையின் இடது மேற்புறத்தில் விண்ணப்பிக்கப் படுகின்ற பதவியை குறித்தல் வேண்டும். அரச சேவை யிலுள்ள விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்களை தனது திணைக்களத் தலைவர்கள் மூலம் சமர்ப்பிக்க வேண்டியதுடன் தாமதித்து கிடைக்கின்ற மற்றும் ஒழுங் காக பூர்த்திபடுத்தத் தவறிய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும் .

3. பணியிலமர்த்தும் பொது நிபந்தனைகள் :

3.1 இப்பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதிய உரித்துடையதாகும்.
விதவைகள் / தபுதாரர், அநாதை பிள்ளைகள் ஓய்வூதிய சம்பள நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்தல் வேண்டும் .

3.2 அரச சேவையின் நியமனம் வழங்கல் தொடர்பான நிருவாகக் கோவையின் 11 அத்தியாயத்தின் 10 - 12 வரையான சரத்துக்களும்
செயலாற்று முறைமைகளும் தொடர்புபடும்.

3.3 தெரிவுசெய்யப் படுகின்ற விண்ணப்பதாரிகள் நிர்வாக விதிக் கோவையின் ஒழுங்கு விதிமுறைகளுக்கும், நிதிக் கோவையின் சட்டதிட்டங்கள் மற்றும் கட்டளைகளுக்கும், அவ்வப்போது
அரசாங்கத்தால் விதிக்கப்படும் பிற கட்டளைகளுக்கும் ஆணைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

4. பொது தகைமைகள் :

4.1 இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்

4.2 சிறந்த நல்லொழுக்கமும் உடலுள நலமும் உடையவராக இருந்தல் வேண்டும்.

4.3 தெரிவுசெய்யப்படும் அதிகாரிகள் நாட்டில் எப்பகுதியிலும்சேவையாற்றுவதற்கு கடமைப்பட்டவர்களாவர்

4.4 விண்ணப்ப முடிவுத் திகதிக்கு 18 வயதுக்கு குறையாத 45 வயதுக்குகூடாதவராக இருக்க வேண்டும். (தற்போது நிரந்தர அரசஉத்தியோகத்தில் இருப்பதாயின் வயதெல்லையினைகருதப்படமாட்டாது.)

5. அனைத்து பதவிகளுக்கும் தேவையான கல்வித் தகைமைகள் :

5.1 க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் வேறுமொரு பாடம் உட்பட நான்கு (04) திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
மற்றும்

5.2 க.பொ.த (உயர் தர) பரீட் சையில் ஒரே தடவையில் பிரயோக கணிதம் / தூய கணிதம் / இணைந்த கணிதம் மற்றும் பௌதிக விஞ்ஞானம் உட்பட மூன்று (03) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்
வேண்டும்.

6. தேவையான ஏனைய தகைமைகள்.- மேற்படி பந்தி 5 இன் கல்வித் தகைமைகளுக்கு மேலதிகமாக துறை சார்ந்த கீழ்க்காணும் தொழில்நுட்ப தகைமைகளிலிருந்து யாதேனும் ஒன்றை பூரணப்படுத்தி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு முன் தொடர்புபட்ட சான்றிதழை பெற்றிருத்தல் :-

(i) மொறட்டுவை பல்கலைக்கழகத்திலோ அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா

(ii) தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகாரசபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா

(iii) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியல் டிப்ளோமா

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியல் டிப்ளோமா

(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் I ஆம் பிரிவில் சித்தி பெற்றிருத்தல்.

7. தெரிவுசெய்யும் முறை :

7.1 எழுத்து மூல போட்டிப் பரீட்சையின் நிபந்தனைகள் .- தகைமையுடனான விண்ணப்பதாரிகளை எழுத்துமூல போட்டிப் பரீட்சைக்கு தோற்றச்செய்வதுடன் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவ தற்கு ஒவ்வொரு வினாத்தாளிலும் குறைந்த பட்சம் 40 வீதம் புள்ளிகளாவது பெற்றிருந்தல் வேண்டும்.
இப்பரீட் சையிலிருந்து பெறும் புள்ளி விபரங்களுக்கேற்ப நேர்முகப் பரீட்சைக்கு ஆட்படுத்தி தகைமையாளர்களை அப் புள்ளி ஒழுங்கின்படி தேர்ந்தெடுப்பர். நேர்முகப் பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்படாததுடன் தகைமைகளை மட்டுமே பரிசோதிக்கப்படும்.

7.2 எழுத்துமூல பரீட்சைக்கான பாடவிதானம் :

(i) தொழில் நுட்ப அறிவு (01 மணித்தியாலம்).- தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவிக்காக :
மூ அளவு, திட்டமிடல் பற்றிய அறிவு, அஸ்திவாரம், மண் வகைகள் , கட்டிடப் பொருட்கள் , கட்டிட முடிவு, கட்டிட திட்ட வரைவுகளால் அளவெடுத்தல், மதிப்பீடுகள் ஒழுங்கமைத்தல் , நீர்வழங்கல் மற்றும் கழிவு வெளிப்படுத்தல்.

(ii) பொது அறிவு மற்றும் உளச்சார்பு (01 மணித்தியாலம்)

* இலங்கையின் நில அமைப்பு, வரலாறு, அரசியல், விளையாட்டு மற்றும் அண்மைக் காலத்தில் இடம் பெற்ற முக்கிய சம்பவங்கள் (சர்வதேச ரீதியில் பெற்றுள்ள வெற்றிகள் உட்பட்டதாக)

* உலகத் தில் ஏற்பட்ட முக்கிய சம்பவங்கள்,புவியியல் ரீதியில் ஏற்பட்டுள்ள பிரிவுகள், தலைமை நகரங்கள், சர்வதேச அமைப்புகளும் அவற்றின் செயற்பாடுகளும்.

* பரீட்சார்த்திகளின் புரியும் சக்தி, தர்க்க ரீதியான விமர்சன அறிவு, ஞானசக்தி, உடனடியாக சரியான முடிவெடுக்கும்திறன் , எண்கள் சார்ந்த மற் றும் கணித ரீதியான சிக்கல்களை தீர்க்கும் திறன், மொழிப் பகுதிகள் , அட்டவணைகள் , படங்கள், வரைபுகள் உபயோகிப்பதும் பரிசோதித்தலும் தொடர்பான அறிவு பரிசோதிக்கப்படும்.

7.3 எழுத்து மூல பரீட்சையை சிங்களம் / தமிழ் எனும் இரு மொழிகள் மூலமும் நடாத்தப்படும்.

8. நியமனமளித்தல் :

8.1 மேற்படி 5.1, 5.2 மற்றும் 6 இன் கீழ் கல்வி மற்றும் தொழிநுட்ப தகைமைகளைப் பெற்றுள்ள தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் இலங்கை தொழில் நுட்ப சேவையில் ஐஐ ஆம் வகுப்பு "ஆ" பிரிவிற்கு சேர்த்துக்கொள்ளப்படும்.

9. சம்பள அளவுத்திட்டம் :
அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 6/ 2006(ஐஏ) இன் MN-3-2006A இன் கீழ், ரூபா 15,005 - 4x180 - 6x240 - 11x320-20x360 - ரூபா 27,885.

10. பதவி உயர்வு முறை.- அனைத்து பதவி உயர்த்தல் நடவடிக் கைகளை இலங்கை தொழில்நுட்ப சேவைகள் விதிக்கோவைக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்.

11. அரச கரும மொழிகள் பற்றிய கொள்கையினை செயல் முறைப்படுத்தல் .- அரச நிர்வாக மற்றும் உள்ஷராட்சி அலுவல்கள்
அமைச்சினால் 2007.04.28 ஆந் திகதி வெளியிட்டிருக்கும் 07/ 2007 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் 2007.07.01 ஆந் திகதிக்கு பின்னர் சேவைக்கு சேரும் அனைத்து அரச பதவியாளர்களும் சேவையில் சேர்ந்த அரச கரும மொழிக்கு மேலதிகமாக அடுத்த அரச கரும மொழி தொடர்பான நிபுணத்துவத்தை சேவையில் சேர்ந்து 05 வருடங்களினுள் பெற்றுக்கொள்ளல் அவசியம்.

டீ.ஜீ .எஸ்.ஜயகொடி,
கட்டிட திணைக்களம், கட்டிட பணிப்பாளர் நாயகம்.
செத்சிரிபாய, பத்தரமுல்ல.

## மாதிரி விண்ணப்பப்படிவம்
## கட்டிட திணைக்களம்
## இலங்கை தொழில்நுட்ப சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்)
## பதவி - II ஆம் வகுப்பு "ஆ" பிரிவு
## அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - S
தமிழ் - T
(உரிய ஆங்கில எழுத்தை கட்டத்தினுள் எழுதவும்)

1. (i) முதலெழுத்துகளுடன் இறுதியாக வரும் பெயர்கள் :..........................................
(ii) முதலெழுத்துகளால் கூறப்படும் பெயர்கள் (சிங்களத்தில்/தமிழில்):..........................................
(iii) முதலெழுத்துகளுடன் பெயர்கள் (ஆங்கில கெப்பிற்றல்எழுத்தில் ):..........................................

2. முகவரியும் தொலைபேசி இலக்கங்களும் :
(i) அலுவலக முகவரி :..........................................
தொலைபேசி இலக்கம் :..........................................
(ii) தனிப்பட்ட முகவரி :..........................................
(iii) தொலைபேசி இலக்கம்:..........................................
(iv) நடமாடும் தொலைபேசி இலக்கம்:..........................................

3. பால் :
ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத் தை கட்டத்தினுள் எழுதவும்)

4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-

5. (i) பிறந்த திகதி :
ஆண் டு மாதம் திகதி
(ii) விண் ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியன்று வயது :
வருடங்கள் மாதங்கள் நாட்கள்

6. சிவில் நிலை:
விவாகமானவர் - 1
விவாகமாகாதவர் - 2
(உரிய இலக்கத் தை கட்டத்தினுள் எழுதவும்)

7. க.பொ.த (சா.த) பரீட்சை தொடர்பான விபரங்கள் (முதலாம் அமர்வு)
(தயவுடன் பிரதிகளை இணைக்கவும் ).
(i) பரீட்சையில் சித்திபெற்ற வருடம் மற்றும் மாதம்:-
..........................................
(ii) விண்ணப்பதாரியின் பரீட்சை சுட்டிலக்கம்:----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
| --- | --- | --- | --- |
| ---------- | ---------- | ---------- | ---------- |
| ---------- | ---------- | ---------- | ---------- |
| ---------- | ---------- | ---------- | ---------- |
| ---------- | ---------- | ---------- | ---------- |

8. க.பொ.த (சா.த) பரீட்சை தொடர்பான விபரங்கள் (இரண்டாம் அமர்வு)
தேவைப் பட்டால் மட்டும் (தயவுடன் பிரதிகளை இணைக்க வும்)
(i) பரீட்சையில் சித்தி பெற்ற வருடம் மற்றும் மாதம்:
..........................................
(ii) விண்ணப்பதாரியின் பரீட்சை சுட்டிலக்கம்:......
..........................................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
| --- | --- | --- | --- |
| ---------- | ---------- | ---------- | ---------- |
| ---------- | ---------- | ---------- | ---------- |
| ---------- | ---------- | ---------- | ---------- |
| ---------- | ---------- | ---------- | ---------- |

9. க.பொ.த (உ.த) பரீட்சை தொடர்பான விபரங்கள் (தயவுடன் பிரதிகளை
இணைக்கவும்)
(i) பரீட்சையில் சித்தி பெற்ற வருடம் மற்றும் மாத
..........................................
(ii) விண்ணப்பதாரியின் பரீட்சை சுட்டிலக்கம்:

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
| --- | --- | --- | --- |
| ---------- | ---------- | ---------- | ---------- |
| ---------- | ---------- | ---------- | ---------- |
| ---------- | ---------- | ---------- | ---------- |
| ---------- | ---------- | ---------- | ---------- |

10. ஏனைய தகைமைகள்:
தொழில்நுட்ப / தொழில்சார் :..........................................
..........................................
..........................................
..........................................
..........................................
..........................................

11. சார்புபட்ட துறைதொடர்பாக பெற்றிருக்கும் அனுபவம் :..........................................
..........................................
..........................................
..........................................
..........................................
..........................................

மேலே 9 மற்றும் 10 இல் குறிப்பிடப்பட்டவைக்கு உகந்த அத்தாட்சிப் படுத்தப்பட்ட உண்மையான பிரதிகள் சமர்ப்பித்தல் கட்டாயமாகும் .

12. விண்ணப்பதாரியின் உறுதியுரை :
இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் நான் அறிந்த வரையில் உண்மையானவை எனவும் , சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத் துகின் றேன் . இதில் ஏதேனும் ஒரு பகுதிஉண்மையற்றவை என் றோ அல்லது பொய்யானவை என்றோ என்னை தேர்ந்து எடுப்பதற்கு முன்னர் அறிந்தாலோ அல்லது இதில் ஏதேனும் ஒரு பகுதி உண்மையற்றவை என்றோ அல்லது பொய்யானவை என்றோ தெரிய வந்தால் நான் தகைமையற்றவன் ஆவேன் எனவும் நியமனம் கிடைத் ததன் பின் னர் தெரியவந்தால் எவ்வித நட்டஈடுமின்றி சேவை நீக்கத்திற்கு ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

..........................................
..........................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.
திகதி :..........................................

(அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மட்டும்)
நிறுவனத் தலைவரின் சான்றிதழ்
இவ் விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி ................................ அவர்கள் தற்போது இவ் அமைச்சில் /திணைக்களத்தில் ........................ எனும் பதவியில் நிரந்தர/ தற்காலிக/ அமைய பதவியாளராக சேவையாற்றுவதாகவும், இவரை மேற்படி பதவிக்காக தெரிவு செய்யப்பட்டால் சேவையில் இருந்து விடுவிக்க முடியும் / முடியாது
எனவும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

..........................................,
பதவி :..........................................
நிறுவன தலைவரின் கையொப்பம்.
திகதி :..........................................

## தினமும் மதுபோதை: ஒருநாள் உயிரைக் குடித்தது

(கிளிநொச்சி)

தினமும் குடிபோதையில் மனைவியுடன் தகராறு செய்துவந்த இளம் கணவர் மதுபோதை அதிகரித்த நிலையில் கிருமிநாசினியை அருந்தி மரணமானார். இச் சம்பவம் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவைச் சேர்ந்த மாணிக்கபுரத்தில் இடம்பெற்றுள்ளது.

அந்தோணிதாஸ் ரவிச்சந்திரன் (வயது 30) என்னும் மூன்று பிள்ளைகளின் தந்தையே மரணமானவராவார்.

இவரது மரண விசாரணையை கிளிநொச்சி மரண விசாரணை அதிகாரி டாக்டர் கே.திருலோகமூர்த்தி மேற்கொண்டார். சாட்சிகளை புதுக்குடியிருப்பு பொலிஸ் உத்தியோகத்தர் திலகரத்தின ஆஜர் செய்தார். மரணமானவரின் மனைவியான ரவிச்சந்திரன் புஸ்பராணி (வயது33) தாயாரான அந்தோணிதாஸ் அமராவதி (வயது-57) ஆகியோரும் சாட்சியம் அளித்தனர். தற்கொலை மரணம் என மரண விசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினார்.

## அகதிப் பயணம்: 64 பேரில் 14 பேர் சிங்களவர்கள்

கடல் வழியாகக் களவாக அகதி அந்தஸ்து தேடிச் செல்ல முயன்று வென்னப்புவ கடற்கரையில் கைதான 67 பேரையும் ஆகஸ்ட் மாதம் ஒன்பதாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம மஜிஸ்திரேட் உத்தரவிட்டார். கடற்படையினரால் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் இரகசியப் பொலிஸாரிடம் மேலதிக விசாரணைகளுக்காகக் கையளிக்கப்பட்டனர். இழுவைப் படகொன்றில் பயணித்துக் கொண்டிருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைதானவர்களில் 14 பேர் சிங்களவராவர்.

# சிறார்களை உடல், உள ரீதியாக பாதுகாப்பது சமூகத்தின் கடமை

### நீதிபதி மா.கணேசராசா

"எமது சிறார்களின் எதிர்காலம் சிறப்புற உடலியல் ரீதியாகவும், மனோவியல் ரீதியாகவும் அவர்களைப் பாதுகாப்பது சமூகத்திலுள்ள ஒவ்வொருவரின் கடமையாகும்" என்று யாழ்.நீதிமன்ற நீதிவான் மாணிக்கவாசகர் கணேசராஜா, கடந்த 26ஆம் திகதி திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் நடைபெற்ற சிறுவர்களின் பிறந்தநாள் விழா கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார். அவர் மேலும் உரையாற்றுகையில்:

சிறுவர் இல்லங்களில் வளருகின்ற பிள்ளைகள் தமது முன்னைய மனத்தாக்கங்களை மறந்து வாழ நாம் உதவ வேண்டும். அத்துடன் எதிர்காலம் சுபீட்சம் நிறைந்ததாக இருக்கும் என்ற நம்பிக்கை ஊட்டும் விதத்தில் அவர்கள் வளர்வதற்கு எம்மாலான உதவிகளை செய்ய வேண்டும். இவ்வாறான பிறந்த நாள் கொண்டாட்டங்கள் பழைய வடுக்களுக்கு அருமருந்தாக அமையும். அத்துடன் தமக்கு ஒருவரும் ஆதரவாக இல்லையே என்ற உணர்வையும் போக்கடிக்கும் வகையிலும் அமையும்.

இல்லங்களில் ஆன்மீக நெறியையும் நல்லொழுக்கத்தையும் கற்பிப்பதுடன் எதிர்காலம் வளமுறுவதற்கு தொழிற் கல்வியையும் கற்பிப்பது அவசியமாகும்.

விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் வளர்ந்து விட்ட நிலையில் புதிதாக உருவாக்கும் திறன் மிக்க எதிர்கால சமுதாயத்தை உருவாக்கும் வகையில் சிறார்களை வழிநடத்துவது எம் எல்லோரினதும் தலையாய கடமையாகும்.

இன்று இச்சைவச் சிறுவர் இல்லத்திலே வளர்கின்ற குழந்தைகளின் எதிர்காலம் சிறப்புற இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் எனவும் தெரிவித்தார்.

மேற்படி சிறுவர் இல்லம் 186 சிறுவர், சிறுமியர்களுக்கு ஆதரவளித்து வருவது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேசசபை சிறுவர் நன்னடத்தை அதிகாரி, சிறுவர் இல்லப் பொறுப்பாளர்கள், பணியாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## வேட்பாளரும் வேறு இருவரும் விளக்க மறியலில்

கிழக்கு மாகாண சபையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் வி.சுரேஷ்குமார், அவரது சகோதரரான சுதாகரன், சட்டத்தரணி கே.கரிகாலன் ஆகியோரை ஆகஸ்ட் மாதம் எட்டாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை பிரதம மாஜிஸ்திரேட் யூ.எல்.ஒ.அஸாரா உத்தரவிட்டார்.

குடியகல்வு, குடிவரவுச் சட்டங்களைமீறி, கடல் வழியாக அவுஸ்ரேலியா செல்ல இலங்கையர்களுக்கு உதவினார்களென்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# கிளிநொச்சியில் குற்றங்களைக் கட்டுப்படுத்த சிவில் குழுக்களின் பங்களிப்பு அவசியம்

### மேலதிக அரசாங்க அதிபர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த சிவில் பாதுகாப்புக்குக் குழுக்கள் பொலிஸாருக்கு ஆக்கபூர்வமாக உதவ முன்வரவேண்டும் என்று கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிறீனிவாசன் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக்கள், பொலிஸ் உயர் அதிகாரிகள் பங்குகொண்ட கருத்தமர்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறைப்புரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நீர் த பூவத்த, கிளிநொச்சி உதவி பொலிஸ் அத்தியட்சகர் செல்வம், கண்டாவளை பிரதேச செயலர் எஸ்.முகுந்தன், கிளிநொச்சி பொலிஸ் பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவுப் பொறுப்பதி காரி அசப்டீன் உட்பட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் சிவில் பாதுகாப்புக் குழுக்களின் ஆலோசகர்கள் முதலானோரும் கலந்து கொண்டனர். பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் மகேந்திரா தலைமையில் இக்கருத்தமர்வு இடம் பெற்றது. மாவட்ட குற்றத் தடுப்பு பொறுப்பதிகாரியும் உரையாற்றினார்.

## முன்பள்ளி டிப்ளோமா கற்கை நெறி

(வலிவெட்டித்துறை)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஆறுதல் நிறுவனத்தின் அனுசரணையில் 2012-2013ஆம் ஆண்டுக்கான முன்பள்ளி டிப்ளோமா கற்கைநெறி எதிர்வரும் ஆகஸ்ட் மாத முதல் வாரத்தில் ஆரம்பமாகவுள்ளது. இதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்றுள்ளது. இதுவரையில் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றாதவர்கள் உடனடியாக வடமராட்சி முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதி லண்டன் செல்லா நிலையிலும் ஆர்ப்பாட்டங்கள்: இன்டிபென்டன்ற் செய்தியே காரணம்

"27ஆம் திகதிய ஒலிம்பிக் ஆரம்ப நிகழ்வுகளில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அநேகமாக கலந்து கொள்ளலாம் என்றுதான் சொன்னேனேயொழிய நிச்சயம் கலந்து கொள்வார் என்று நான் சொல்லவில்லை" இப்படிச் சொல்கிறார் ஜனாதிபதியின் பேச்சாளரான பந்துல ஜெயசேகர.

ஒலிம்பிக் போட்டியின் ஆரம்ப நிகழ்வுகளில் ஜனாதிபதி கலந்து கொள்ளவுள்ளார் என்று லண்டனில் இருந்து வெளிவரும் 'த இன்டிபெண்டன்ற்' ஆங்கிலப் பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது. இதனையடுத்து ஜனாதிபதி லண்டனுக்குச் சென்றிருக்காத நிலையில் சில இலங்கைத் தமிழர் அமைப்புகள் லண்டனில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியதாக செய்திகள் வெளியாகிருந்தன. இது தொடர்பாகக் கேட்டபோதே ஜனாதிபதியின் பேச்சாளர் மேற்கண்டவாறு சொன்னார்.

த இன்டிபென்டன்ற் என்ற லண்டன் பத்திரிகையின் நிருபரான ஜெரோமி ரெயிலர் தன்னோடு தொடர்புகொண்டு ஜனாதிபதி லண்டனுக்கு வருகை தருவாரா? என்று தன்னிடம் கேட்டார் என்று பந்துல தெரிவித்தார்.

"ஒலிம்பிக்குக்கு வருகை தர ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டாரா? அல்லது ஆரம்ப வைபவத்திற்கு வருகை தர திட்டமிட்டுள்ளாரா" என்று ஜெரோமி தன்னிடம் கேட்டபோது, 'ஜனாதிபதி வரலாம்' என்றுதான் பதிலளித்தார் என்று பந்துல கூறினார். ஜனாதிபதி ஆரம்ப நிகழ்வுகளுக்கு வருவாரா என்று ஜெரோமி கேட்ட போது 'அநேகமாக' என்றுதான் பதிலளித்தார் என்றும் பந்துல ஜெயசேகர குறிப்பிட்டார். லண்டன் ஒலிம்பிக்கில் ஜனாதிபதி பங்குபற்றுவரா? இல்லையா? என்பது குறித்து திட்டவட்டமான பதில் எதனையும் தான் வழங்கவில்லை என்றும் ஜெயசேகர தெரிவித்தார்.

உலகத் தமிழர் பேரவை, பிரிட்டிஷ் தமிழர் முன்னணி, இன ஒழிப்புக்கு எதிரான தமிழர்கள் என்ற லண்டனில் இயங்கும் தமிழர் அமைப்புகள் ஜனாதிபதியின் லண்டன் வருகையை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். இன்டிபென்டன்ற் பத்திரிகையில் வெளியான செய்தியையடுத்தே ஆர்ப்பாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன என்கிறது வெளிவிவகார அமைச்சு.







மக்கள் வங்கியின் 51 ஆவது ஆண்டு விழா கிளிநொச்சி மக்கள் வங்கி கிளைப் பணிமனையில் இடம்பெற்றபோது கிளிநொச்சி மக்கள் வங்கி முகாமையாளர் கௌரிபாலன் தலைமையுரையாற்றுவதையும், அருகில் மூத்த வங்கி வாடிக்கையாளர்களையும், நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கிளிநொச்சி மத்திய கல்லூரி அதிபர் திருமதி சிவகரன் வங்கிப் பணியாளர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும், அருகில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையைச் சேர்ந்த டாக்டர் மா.ஜெயராசாயும் படங்களில் காணலாம். (படங்கள் : கிளிநொச்சி நிருபர்)

தமிழ்நாதம்
Thamil Naatham
ஜூலை மாதம் 30ஆம் திகதி திங்கட்கிழமை

## பதின்மூன்றுக்கு வயது 25

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகி நேற்றுடன் 25 வருடங்கள் கழிந்துவிட்டன. இந்த ஒப்பந்தம் மூலம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டதே பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தமாகும். இலங்கையில் கூர்மையடைந்து வந்த இன முரண்பாட்டுக்கு ஒத்தடம் போடுவதற்கு எடுக்கப்பட்ட மூன்று தசாப்த கால முயற்சிகள் தோல்வியுற்ற பின்னர், மேற்கொள்ளப்பட்ட மற்றொரு முயற்சி இது. 1957இன் பண்டா-செல்வா ஒப்பந்தம், 1965இன் டட்லி-செல்வா ஒப்பந்தம், 1981இன் மாவட்ட அபிவிருத்திச் சபை என்றெல்லாம் எடுக்கப்பட்ட முயற்சிகள் கருவிலேயே சிதைக்கப்பட்டன. மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று முயற்சிகளுமே கணிசமான அளவு சமாதானச் சூழ்நிலைகளிலேயே மேற்கொள்ளப்பட்டன. இலங்கைப் பிரச்சினைத் தீர்வுக்காக முற்றுமுழுதாக இலங்கை அரசியல் தலைவர்களால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அவை. ஆனால் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் தோற்றம் பெற்ற காலப் பகுதியில் வடக்கிலும், கிழக்கிலும் ஆயுதங்களும் அரசியல் அரங்குக்கு வந்துவிட்டன.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் அன்று இலங்கை ஜனாதிபதியாகவிருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் கையை முறுக்கி மேற்கொள்ளப்பட்டதென்றால் அதில் தவறில்லை. அது அன்றைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கும் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்திக்குமிடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம். சோவிய ரஷ்ய சார்பு நாடாக அன்றைய இந்தியாவும், அமெரிக்க - இஸ்ரேலியச் சார்பு அரசாக அன்றைய ஜே.ஆர். ஆட்சியும் இருந்தமை இந்தியாவை உறுத்தியது.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர்தான் இந்தியப் படையினரின் 'ஒப்பரேசன் பூமாலை' என்ற ஒரு நடவடிக்கையை இடம்பெற்றது. அதாவது 'ஒப்பரேசன் லிபரேசன்' என்ற நடவடிக்கையை இலங்கை இராணுவம் வடமராட்சியில் ஆரம்பித்தபோது அதனை நிறுத்துவதற்காக இலங்கையின் வானப் பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த இந்தியப் படைத்தரப்பு விமானங்கள் யாழ்ப்பாணத்தில் அரிசி, சீனி ஆகிய பொருட்களடங்கிய பொதிகளைப் போட்டன. இது 1987ஆம் ஆண்டு ஜுன் மாதம் 4ஆம் திகதி இடம்பெற்றது. இதற்கு முன்னதாக அரிசி, சீனி போன்ற அத்தியாவசியப் பொருட்களோடு இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைய முயன்ற இந்தியக் கப்பல்களை இலங்கைக் கடற்படை தடுத்து நிறுத்தி திருப்பியனுப்பியது. இதன் பின்னர்தான் இந்தியப் படையின் அத்துமீறல் நிகழ்ந்தது. இதற்கு மூன்று வருடங்கள் முன்னதாகத்தான் இலங்கைத் தமிழ் ஆயுதக் குழுக்களுக்கு இந்தியாவில் ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தோடு இந்தியாவின் முப்படையினரும் இலங்கைக்கு வருகைதந்து வடக்கு, கிழக்கில் நிலைகொண்டனர். இராணுவப்பணி காரணமாக அந்நிய மண்ணில் இந்தியப் படை காலடி எடுத்து வைத்த முதல் சந்தர்ப்பம் இது. விளைவு. தாமே பயிற்சியளித்த தமிழீழ ஆயுதக் குழுவொன்றுடன் மோத வேண்டிய சந்தர்ப்பமும் இந்தியப் படைக்கு ஏற்பட்டது. ஐ.தே.க.வின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது ஜனாதிபதி ஆட்சி பீடத்தில் இருக்கையில் இலங்கைக்கு வந்த இந்தியப் படை, ஐ.தே.க.வின் இரண்டாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவினால் வெளியேற்றப்பட்டது. இவை வரலாற்று நிகழ்வுகள்.

அதிகாரப் பகிர்வின் அலகாக மாகாணங்களையே இந்த ஒப்பந்தம் முன்வைத்தது. வடக்கு - கிழக்கின் இணைப்பை முன்வைத்தது, கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு இணைப்பு, நிரந்தரமா? இல்லையா? எனத் தீர்மானிக்கப்படுமென்றும் கூறியது. இலங்கை வாழ் தமிழ் மக்களின் வரலாற்று வாழ்விடங்கள் வடக்கும், கிழக்கும் என்பதையும் ஒப்பந்தம் ஏற்றுக்கொண்டது. வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து மாகாணங்களிலுமே மாகாண சபைகள் ஏற்படுத்தப்பட்டன. இணைந்த வடக்கு - கிழக்கு மாகாண சபை குறுகிய காலத்திலேயே வாழ்விழந்து போனது. மும்மொழித் திட்டம் அமுலுக்கு வரவும் ஒப்பந்தம் மூல காரணமானது.

ஆனாலும் நடந்தது என்ன? எல்லாமே இல்லாமல் போயின அல்லது குறைப்பிரசவமாகிப் போயின. இனப்பிரச்சினையின் ஆணி வேராகக் கருதப்படும் வடக்கில், மாகாண மட்டத்திலான அதிகாரப் பகிர்வு கூட இன்னமும் இல்லை. 13 பிளஸ் என்கிறார்கள், 13 மைனஸ் என்றும் சொல்கிறார்கள். மைனஸ் என்றால் பிரச்சினை இன்னமும் மோசமாகும். பிளஸ் என்றாலும் பிரச்சினை முற்றுமுழுதாகத் தீர்ந்து விடப்போவதில்லை. இரண்டாவது சபையொன்றினை அமைப்பது தான் பிளஸ் என்றால் அதனால் ஆகிவிடப் போவது ஒன்றுமில்லை.

இனப் பிரச்சினையை வைத்துக்கொண்டு பிரதான இரண்டு இனங்களையும் சார்ந்த அரசியல் கட்சிகள் இனியும் சித்து விளையாட்டுகளில் ஈடுபட முனையுமென்றால் நடக்கப்போவது ஒன்றுமே இல்லை.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021-2219506, பக்ஸ்: 021-2219505
e-mail: tnaatham@yahoo.com

# கல்வியும் இன்று ஒரு வர்த்தகப் பண்டம்தான்

இன்றைய நிலையில் பொதுவாக உலக நாடுகளில் சிறந்த வியாபார நிறுவனமாக கல்விக் கூடங்கள் விளங்குகின்றன. இலவசக் கல்வி என்ற உயர் வாய்ப்பை எமது பிள்ளைகள் பெற்றிருக்கின்ற போதிலும் தெருவுக்கு தெரு வியாபித்திருக்கும் ரியூசன் வகுப்புகளால் ஆசிரிய முதலாளிகள் பெருத்திருக்கிறார்கள். அது மாத்திரமல்ல, ரியூசன் நிலையங்களையொட்டி பக்க வியாபாரங்களாக அச்சகங்களுக்கும் வேலை உள்ளது. வியாபார நோக்கில் சிந்திக்க முற்பட்ட இந்த ஆசிரியர்கள் அந்த அச்சுவேலைகளிலும் ஈடுபடுகிறார்கள். எமது உயர்தர வகுப்பு மாணவன் சொல்கிறான் "நான் ஒரு டாக்டராக வருவதைவிட, ஆசிரியராக வருவதையே விரும்புகிறேன். பல தொழில்களையும் செய்வதற்கு போதிய நேரம் இருக்கும், நிறைய உழைக்கலாம்" என்கிறான்.

தமிழ்நாட்டின கல்விநிலை பற்றிய இந்திரா பார்த்தசாரதியின் அனுபவத்தை கீழே உள்ள கட்டுரை தருகிறது.

இன்று பணத்தை அள்ளித்தரும் காமதேனுவாக இருப்பது கல்வி வியாபாரம். வியாபாரம் செவ்வனே நடப்பதற்கு உறுதுணையாக இருப்பவர்கள் அரசியல்வாதிகள்.

கல்வியின் நோக்கம் இது தானா? "கல்" என்றால் "தோண்டுதல்". இது "வி" என்ற விகுதி பெற்றுக் "கல்வி" என்றாகிறது. "தோண்டுதல்" என்றால் துருவித்துருவி ஆராய்தல். அதாவது கல்வியின் நோக்கம் விசாரித்துத் தெளியும் அறிவு.

பிரமிப்பு உணர்வுதான் அறிவின் தொடக்க நிலை. முதல் அடிவைக்கக் கற்று நடக்கும் குழந்தைக்குப் பிரபஞ்சத்தின் எல்லையின்மையை அறிந்துகொள்ளத் தூண்டி விரியும் பிரமிப்பு உணர்வு. சந்திரனில் காலை வைத்த லூயிஸ் ஆர்ம்ஸ்டாராங் சொன்ன முதல் வாக்கியம்" "மனிதனுக்கு ஓர் சிறிய அடி, ஆயினும் இது மனித சமுதாயத்துக்கு மாபெரும் பாய்ச்சல்"அணுவாக (வாமனாக) வந்து அகிலத்தை அளந்த திருவிக்கிரமனைப் போல.

தற்காலக் கல்வித் திட்டத்தில் இப்பிரமிப்பு உணர்வின் உந்துதலினால் விளையும் விசாரணை அறிவுக்கு இடமிருக்கின்றதா? கல்வியை வியாபாரமாக்கிய பிறகு, விசாரணை அறிவைப் பற்றி ஏன் கவலைப்பட வேண்டும்?

பழங்காலத்தில் கல்வியை மூன்று நிலைகளில் கண்டார்கள்.

1. ஸ்ரவணம்
2. மனனம்
3. நிதிதியாசனம்.

"ஸ்ரவணம்" என்பது கேள்வி அறிவு. "கற்றலில் கேட்டல் நன்று"

"மனனம்" என்பது கற்பவற்றை மனத்தில் நிறுத்துதல்.

சிந்தனையை ஒருமைப்படுத்தி விசாரித்தறியும் அறிவு "நிதிதியாசனம்".

"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு"
என்பது குறள்.

ஆனால் இன்றைய கல்வித் திட்டத்தில் காலியாக இருக்கும் அறையைப் பொருள்கள் வைத்து நிரப்புவது போல், ஒரு மாணவனின் மூளையைத் தன்னளவில் செயல்பட வைக்காமல், ஏட்டுக் கல்வியை வைத்துத் திணிக்கிறார்கள்.

உபநிடத்தில் சனத்குமாரன் நாரதரிடம் சொல்லுகிறான்: "நீ வேதங்களை மனனம் செய்திருப்பதாகக் கூறுகிறாய். நீ கற்றிருப்பவை அனைத்தும் வெறும் வார்த்தைகள்தாம்".

"வார்த்தைகள், வார்த்தைகள், வார்த்தைகள்" என்று சலிப்புடன் அலுத்துக் கொள்கின்றான் ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட்.

இன்றைய கல்வித் திட்டத்தின் படி, ஒரு கெட்டிக்கார மாணவன் என்பவன் சுயமாகச் சிந்திக்கத் தெரியாத, மற்றவர்களால் மூளையில் நிரப்பப்பட்ட ஒரு நடமாடும் கலைக் களஞ்சியம், அவ்வளவுதான். தன் அறிவை ஓர் ஆக்கபூர்வமான கருவியாகப் பயன்படுத்தத் தெரியாத ஒரு புத்தக அலுமாரி.

இப்பொழுது ஒரு இளைஞனின் அதிகபட்ச ஆசை மென்பொருள் விஞ்ஞானி ஆக வேண்டுமென்பது. காரணம், கவர்ச்சிகரமான வேலை, கைநிறையச் சம்பளம்.

உண்மையான கல்வி அறிவு நடைமுறை அறிவை விரிவாக்கும். இதை விளக்க ஒரு கதை உண்டு.


ராமானுஜருடைய சிஷ்யர் கூரேசர். அவருடைய மகன் பராசரப்பட்டர். கருவிலே திருவுடையவரான அவர், சிறுவனாக இருந்தபோது, அவர் தோழர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த தெருவில், வட இந்தியாவிலிருந்து அனைத்து நூல்களையும் கற்றறிந்த ஒருவர் விருது ஊதிக்கொண்டு வந்தார். (அதாவது, அந்தக் காலங்களில், கல்வி கேள்விகளில் சிறந்த ஒருவர் வீதியில் வரும் போது, அவர் பெற்ற பட்டங்களையெல்லாம் ஒருவர் உரக்கச் சொல்லிக்கொண்டு வருவது வழக்கம். நாம் இன்றும் அந்த மரபை வேறு வகைகளில் பேணி வருகிறோம் என்பது அனைவரும் அறிந்த செய்தி) பட்டர் வீதியிலிருந்த மண்ணைக் கையில் அள்ளிக் கொண்டு அந்த சர்வஞ்ஞரிடம் போய், "இதில் எவ்வளவு மண் இருக்கிறது?" என்று கேட்டார். அந்த அறிஞர் அவர் கையை நெடுநேரம் உற்றுப் பார்த்து மனத்தில் கணக்குப் போட்டு யோசித்துப் பார்த்து விட்டு, "எவ்வளவு மண் என்று எப்படிச் சொல்ல முடியும்? எண்ணிப் பார்த்தால் தான் தெரியும்." என்றார்.

பட்டர் சொன்னார்: "அறிஞரே! ஒரு கைப்பிடி மண் என்று சொல்லத் தெரியவில்லையே! உங்களுக்கா விருது?" நூல்களைப் படித்தால் மட்டும் போதாது, படித்தவற்றின் அடிப்படையில், சுயமாகச் சிந்திக்கப் பழக வேண்டுமென்பதை விளக்க இக்கதை.

இன்று நம் பள்ளிக்கூடங்களோ, அல்லது பல்கலைக் கழகங்களோ அப்படி இயங்குகின்றனவா? வகுப்பறைகள் நாடக அரங்குகளாயிருக்கின்றன. ஆசிரியர் நிகழ்த்தும் கலைஞர், மனனம் செய்தவற்றை வசனமாக ஒப்பிக்கின்றார். மாணவர்கள் பார்வையாளர்கள். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே அறிவுபூர்வமான உரையாடல் ஏதுமில்லை. எல்லாம் ஆசிரியரின் தனிமொழிதான். மாணவர்களைச் சிந்திக்கத் தூண்டினால் தானே உரையாடல் சாத்தியம்?

சாந்தோக்கிய உபநிஷத் கூறுகிறது: "சிஷ்யனைச் சிந்திக்கத் தூண்டுபவனே ஓர் உண்மையான குரு. அவர் சிஷ்யனைக் கைப் பிடித்துப் போய்ச்சேர வேண்டிய இடத்துக்கு அழைத்துச் செல்ல மாட்டார். அவர் இந்தத் திசையில் உன் நாடாகிய காந்தார தேசம் இருக்கிறது. வழியை விசாரித்துக் கொண்டு போ என்று சொல்லும் வழிகாட்டி. நீ இவ்வாறு விசாரித்துப் போவதனால் பெறும் அநுபவமே கல்வியறிவு".

ஒவ்வொரு மாணவனின் உள்ளாற்றலை அவனுக்கே தெளிவிக்கும் ஒரு கலாசாரக் கருவியாகத்தான் ஆசிரியர் இருக்க வேண்டுமென்றால், அப்பணி அவ்வளவு எளிதன்று. எல்லா வகைகளிலும் பரிணாமமுற்று, நன்கு தேர்ந்த ஆசிரியரால் தான் இதைச் செய்ய இயலும்.



இன்று பல்கலைக்கழகப் பேராசிரியர்களில் பெரும்பான்மையோர் இப்பணிக்கு வேறு பல வாய்ப்புக்களை இழந்ததன் காரணமாக வந்தவர்கள். மற்றவர்கள், ஆட்சிபீடத்தின் ஆசிர்வாதத்தால் வந்தவர்கள்.

கல்வியையும் கலாசாரத்தையும் பிரித்துக் காண இயலாது. கல்வியின் நோக்கமே, தனிமனித சுயசிந்தனையினால், சமூகப் பண்பாட்டைப் பேணுதல் என்பதுதான்.

கலையின் சாரத்தைத் தனதாக்கிக் கொள்ளுதல் கல்வி. "கற்கும் கல்விக்கு எல்லை இலனே என்னும் என்பது திருவாய்மொழி. அதாவது, கல்விக்கு நிலைக்களனாக இருக்கும் பிரமிப்பு உணர்வுக்கு ஓய்வே இல்லை என்று பொருள். அறியுந்தொறும் அறியாமைக் கண்டற்றால்" என்றார் வள்ளுவர்.

கல்வியைக் கடை வியாபாரமாக்கிவிட்டால், கலாசாரம் எங்கிருந்துவரும்? பண்பாடு எப்படி உயர்வு பெறும்? சமூகம் சீரழிவை நோக்கியே செல்லும்.

# இன்றைய சிந்தனை

## "எம் உள்ளத்தில் என்னவாக நினைக்கிறோமோ., அதுவாகவே இருக்கிறோம்"

ஆற்றல், மதிநுட்பம் மற்றும் அன்பு ஆகியவற்றாலான பிறப்பாகிய நீங்கள் ஒவ்வொரு சூழ்நிலைக்கும் உரிய திறவுகோலைக் கைக்கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் என்னவாக விரும்புகிறீர்களோ அதுவாகவே உங்களை ஆக்கிக் கொள்வதற்கான - உங்களுக்குள் மாறுதலை ஏற்படுத்திப் புத்துயிர் அளிக்கும் - கிரியா ஊக்கியை உங்களுக்குள்ளேயே நீங்கள் கொண்டிருக்கிறீர்கள்.

"நாம் நெஞ்சில் என்னவாக நினைக்கிறோமே அதுவாகவே இருக்கிறோம்" என்ற முதுமொழி நம் உலக வாழ்வின் இருப்பு முழுவதையும் உள்ளடக்கியதோடு மட்டுமின்றி, நம் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலைமையையும் ஒவ்வொரு புறச் சூழ்நிலையையும் தொடுமளவுக்கு மிகப் பரந்த பொருள் பொதிந்தது. நாம் என்னவாக இருக்கிறோம் என்பது மொழி மெய்யாகவே நாம் என்னவாக நினைக்கிறோம் என்பதைக் குறிக்கிறது. நம் குணாதிசயம் என்பது நம் அனைத்து எண்ணங்களின் முழுமையான சாராம்சமாய் விளங்குகிறது.

தாவரம் எங்ஙனம் விதையிலிருந்து முளைத்து வருகிறதோ, எங்ஙனம் அந்த விதையின்றி அது உருவாகியிருக்க முடியாதோ, அங்ஙனமே நம் ஒவ்வொரு செயலும் நம்முடைய எண்ணங்களாகிய மறைந்திருக்கும் விதைகளிலிருந்து வெளிக்கிளம்புகின்றன. அவ்விதைகள் இல்லாமல் அச்செயல்கள் தோன்ற முடியாது. "தன்னிச்சையாய்" மற்றும் "சிந்திக்காமல்" செய்துவிட்ட செயல்களுக்கும், வேண்டுமென்றே மேற்கொண்ட செயல்களுக்கும் இவ்வுண்மை சரிசமமாய்ப் பொருந்தும்.

எண்ணத்தின் மலரே செயல், இன்பமும் துன்பமும் அதன் கனிகள். இவ்வாறுதான் நாமே நட்டு வைத்த தாவரத்திலிருந்து இனிப்பான மற்றும் கசப்பான கனிகளை நாம் சேகரிக்கின்றோம்.

நாம் என்னவாக இருக்கிறோம் என்பது நம் மனதில் எழும் நம் சொந்த எண்ணங்களாலேயே வடிவமைத்து நிர்மாணிக்கப்படுகிறது. மனதில் அஞ்ஞான அல்லது தீய எணணங்களை வளர்த்தோமெனில் துன்பம் விரைவில் பின் தொடர்ந்து வரும். நம் எண்ணங்கள் ஆரோக்கியமானவையாக வும் நலம் பயப்பவையாகும் இருந்தால் வெயில் நாளில் நம் நிழல்கள் நம்மைப் பின் தொடர்வது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாக இன்பம் நம்மைப் பின்தொடரும்.

ஒரு மனிதன் நியதிக்கு உட்பட்டு நியதியால் வளர்பவனேயன்றி, செயற்கையாய் உருவானவன் அல்லன். இந்தக் காரணி - விளைவு கண்ணுக்குத் தெரியக் கூடிய லௌகீக விஷயங்களில் எவ்வளவு பூரணத்துவத்துடனும் வழி பிறழாமையுடனும் உள்ளதோ, அந்த அளவுக்கு மறைந்திருக்கும் பகுதியான எண்ணத்திலும் உள்ளது.

நாம் நம்மால் மட்டுமே உருவாக்கப்படுகிறோம் அல்லது வீணாக்கப்படுகிறோம். எண்ணமாகிய ஆயுதச் சாலையில் நம்மை நாமே அழித்துக் கொள்ள நாம் உபயோகிக்கும் ஆயுதங்களை உருவாக்குகிறோம். மகிழ்ச்சியும் வலிமையும் சாந்தமுமான சொர்க்க மாளிகைகளை நிர்மாணிப்பதற்கு நாம் உபயோகிக்கும் சாதனங்களையும் வடிவமைக்கின்றோம். எண்ணங்களின் சரியான தேர்வுகளாலும், அவற்றின் மெய்வழிப் பிரயோகங்களாலும் நாம் தெய்வீகப் பூரணத்துவத்துக்கு உயர்கிறோம்.

-ஜேம்ஸ் ஆலன்

# நடிகர் திலகம் சிவாஜி கணேசன்



உலகம் போற்றும் தமிழ் நடிகர் செவாலியர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் 1927ஆம் வருடம் அக்டோபர் மாதம் 1ஆம் நாள் சின்னையாமன்றாயர் - ராஜாமணிஅம்மாள் ஆகியோருக்குமகனாகசீர்காழியில் பிறந்தார். இவரது இயற்பெயர் சின்னையாப்பிள்ளைகணேசன் ஆகும். சிவாஜி கணேசன் அவர்கள் 2001 ஜூலை 21இல் இறந்தார்.

சிவாஜி கணேசன் திரையுலகில் அறிமுகமாகும் முன் மேடைநாடகங்களில் நடித்துவந்தார். அச்சமயம் சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் என்றநாடகத்தில் பேரரசர் சிவாஜியாகநடத்தார். அந்நாடகத்தில் அவரதுநடிப்புத்திறனைக் கண்டதந்தைப் பெரியார் அவரை "சிவாஜி"கணேசன் என்றுஅழைத்துபாராட்டினார். அன்றிலிருந்துஅதுவேஅவரதுபெயராகிவிட்டது.

பராசக்திபடம் மூலம் திரையுலகில் அறிமுகமானசிவாஜி கணேசன் 300க்கும் மேற்பட்டதமிழ் படங்களிலும்,ஒன்பதுதெலுங்குப் படங்களிலும், இரண்டு இந்திப் படங்களிலும்,ஒருமலையாளத் திரைப்படத்திலும் நடித்துள்ளார்.

இவர் நடித்தமனோகரா,வீரபாண்டியகட்டபொம்மன் போன்றதிரைப்படங்கள் வசனத்திற்காகப் பெயர் பெற்றவை. கப்பலோட்டியதமிழன் படத்தில் வ.உ.சிதம்பரம் பிள்ளையாகநடித்துஅவரைநம் கண் முன் நிறுத்தியவர்.

பாசமலர்,வசந்தமாளிகை,உயர்ந்தமனிதன்,கௌரவம்,தில்லானாமோகனாம்பாள்,திருவருட்செல்வர்,திருவிளையாடல்,புதியபறவை,தியாகம்,திரிசூலம் போன்றபடங்கள் இவருக்குபேரும் புகழும் பெற்றுத் தந்தன.

ஆரம்பகாலம் முதல் 1955 வரைசிவாஜி கணேசன் திராவிட இயக்கங்களில் ஆர்வம் கொண்டுவிளங்கினார். 1961ல் காங்கிரஸ் கட்சியில் இணைந்துசெயல்படத் துவங்கினார். 1982ல் நாடாளுமன்றமேலவைஉறுப்பினராகபதவிவகித்தார். 1987ல் காங்கிரஸில் இருந்துபிரிந்துதமிழகமுன்னேற்றமுன்னணிஎன்றகட்சியைஆரம்பித்துதிருமதி ஜானகிராமச்சந்திரனின் அதிமுககட்சியுடன் கூட்டணிவைத்துதேர்தலில் போட்டியிட்டார். இருப்பினும் அவரால் தேர்தலில் வெற்றிபெறமுடியவில்லை. பின்னர் படிப்படியாகஅரசியலிலிருந்துவிலகினார்.

சிவாஜி கணேசன் பெற்றவிருதுகள் மற்றும் கௌரவங்கள்

ஆப்பிரிக்க - ஆசியத் திரைப்படவிழா (கெய்ரோ 1960)- சிறந்தநடிகருக்கானவிருது

பத்ம ஸ்ரீ விருது (1966)

பத்ம பூஷன் விருது (1984)

செவாலியேவிருது (1994)

தாதாசாகேப் பால்கேவிருது (1997)

1962ல் அமெரிக்கநாட்டின் சிறப்புவிருந்தினராகசுற்றுப்பயணம் மேற்கொண்டபோது,நயாகராமாநகரின் "ஒருநாள் நகரத்தந்தையாகக்" கௌரவிக்கப்பட்டார்.

# வாரிசுகளைக் காப்பாற்ற கருணாநிதி முயற்சி

## - பழ நெடுமாறன்

சென்னையில் ஆகஸ்ட் 12-ம் தி ஈழத் தமிழர் வாழ்வுரிமை மாநாடு (டெசோ) கருணாநிதி தலைமையில் நடைபெற உள்ளது.

2ஜி அலைக்கற்றை வழக்கில் மத்திய அரசை மிரட்டவே டெசோ மானாட்டை நடத்துகிறார் என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ நெடுமாறன் கூறினார்.

2ஜி அலைக்கற்றை விவகாரத்தில் கலைஞர் தொலைக்காட்சிக்கு ரூ. 238 கோடியும், சன் தொலைக்காட்சிக்கு ரூ. 500 கோடியும் லஞ்சப் பணமாக கொடுக்கப்பட்டுள்ளதாக சி.பி.ஐ. விசாரணை அறிக்கையைத் தாக்கல் செய்துள்ளது.

இப்பிரச்னையில் தொடர்புடைய மகள் கனிமொழி, பேரன்கள் மாறன் சகோதரர்களைக் காப்பாற்றுவதற்காகவே, காங்கிரஸ் கட்சியுடன் முரண்பட்டு நிற்கும் தலைவர்களைத் திரட்டி மாநாடு நடத்துகிறார் கருணாநிதி. இம்மாநாடு மத்திய அரசை மிரட்டவே தவிர, ஈழத் தமிழர்களுக்காக அல்ல என்றும் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்

## இரத்தினசபாபதி ராஜேஸ்வரி

கோண்டாவில் மேற்கைச்சேர்ந்த காலஞ்சென்ற இரத்தினசபாபதி (அப்பாத்துரை) அவர்களின் அன்பு மனைவி ராஜேஸ்வரி நேற்று (29.07.2012) ஞாயிற்றுக்கிழமை இரவு காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.
உப்புமடத்தடிச் சந்தி,
கோண்டாவில் மேற்கு.



# கழுகுக் கண்கள்

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சை எவ்விதம் எமது பாடசாலைகளில் இடம்பெறுகின்றன என்பதை நேரில் கண்டறிவதற்காக நான் பல பாடசாலைகளுக்கு நேற்றுப் பறந்து சென்றேன். அங்கு வகுப்புகளில் பாடங்கள் நடப்பதை அவதானித்த நான், பாடசாலையின் விஞ்ஞான ஆய்வுகூடப் பக்கம் நோட்டம் விட்டேன்.

அவற்றிலும் மாணவ, மாணவிகள் இரசாயண மற்றும் பௌதீகவியல் ஆய்வுகளில் ஈடுபடுவதைப் பார்த்து மகிழ்ச்சியடைந்த நான் பாடசாலையில் இருந்த கணினிப் பாட வகுப்பை சென்று பார்த்தேன். அங்குள்ள கணனிப் பாட வகுப்பில் சுமார் 20 அல்லது 25 கணினிகள் இருந்தன. அவற்றிலும் மாணவ, மாணவியர் தீவிரமாக கணினிகளைப் பயப்படுத்திக் கொண்டிருந்தனர்.

பாடசாலை நூலகத்துக்குச் சென்று சற்று ஓய்வு எடுப்போம் என்ற சிந்தனையில் நூலகத்துக்குச் சென்ற போது அந்தப் பாடசாலையின் நூலகங்கள் மூடப்பட்டு தூசி படிந்திருப்பதையும், அங்கு சிலந்திக் கூடுகள் அமைத்திருப்பதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தேன். அவற்றின் தோற்றத்தில் இருந்து இந்தப் பாடசாலை நூலகங்களை மாணவ மாணவியர் பலமாதங்களாக பயன்படுத்தவில்லை என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது.

இதனால் எனக்கு கடந்த கால நிகழ்வுகள் ஞாபகத்துக்கு. வந்தன. பாடசாலைப் பிள்ளைகள் மட்டுமன்றி வயது வந்தவர்கள் மத்தியிலும் இன்று புத்தகம் வாசிக்கும் பழக்கம் குறைந்து வருகின்றமை குறித்து கல்விமான்களும், அறிஞர்களும், பேராசிரியர்களும் வேதனைப்படுகின்றார்கள்.

1900 ஆவது ஆண்டில் நம்நாட்டு மக்களில் படிப்பறிவுடையவர்கள் குறைவாக இருந்த போதிலும், அவர்களின் சிறந்த முன்மாதிரியான வழிகாட்டலின் மூலம் இலங்கையில் புத்தகம் வாசிக்கும் பழக்கம் வலுப்பெற ஆரம்பித்தது. அன்று இலங்கையில் இருந்த குறைந்த எண்ணிக்கையிலான அரசாங்கப் பாடசாலைகளிலும், கிறிஸ்தவ மிஷனறிகளினால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளிலும் நூலகங்களை வைத்திருப்பது கட்டாயப்படுத்தப்பட்டிருந்தது.

அன்றைய பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அரசாங்கம் பல்வேறு துறைகளின் மேம்பாட்டுக்கு மானியத்தொகை வழங்கும் போது பாடசாலைகளின் வளர்ச்சிக்கு, குறிப்பாக பாடசாலை நூலகங்களின் வளர்ச்சிக்கு நிதி உதவி வழங்குவதற்கு முன்னுரிமை அளித்தனர். லண்டனில் வெளியாகும் புதிய பொருளாதாரம், வணிகத்துறை, விஞ்ஞான வளர்ச்சி, தாவரவியல், மிருகவியல், கணிதம் மற்றும் ஆங்கில இலக்கியம் தொடர்பான நூல்களை தருவித்து அவற்றை நம்நாட்டு பாடசாலை நூலகங்களுக்கு சரிசமமாக பகிர்ந்தளிக்கவும் அன்றைய பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தவறவில்லை. இதனால்தான் ஆசியாவிலேயே மிகப் பெரிய நூலகத்தை நாம் யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தி சாதனை படைத்தோம்.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தாங்கள் இலங்கையில் ஆட்சி செலுத்திய காலகட்டத்தில் எங்கள் நாட்டின் தேசிய பொருளாதாரத்தை சூறையாடினார்கள் என்ற குற்றச்சாட்டுக்கள் பரவலாக இருந்து வருகின்ற போதிலும், ஒரு விடயத்தில் நாம் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்.

இன்றும்கூட பல ஆபிரிக்க, ஆசிய நாடுகள் சர்வதேச மொழிகளான ஆங்கிலம், பிரெஞ், ஸ்பெயின் தேசத்து மொழி ஆகியவற்றை கற்றுக்கொள்ளும் வாய்ப்பின்றி இருக்கின்றார்கள். ஆயினும் சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னரே பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் சர்வதேச மொழியான ஆங்கிலத்தை எங்கள் நாட்டு மக்களுக்கு பாடசாலைகளின் மூலம் இலவசமாகக் கற்றுக்கொடுத்தார்கள். இது பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இலங்கைக்குச் செய்த ஒரு மாபெரும் பணியாகும்.

சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு மாணவருக்கு ஒரு குறிப்பிட்ட தொனிப்பொருளில் கட்டுரை ஒன்றை எழுதச் சொன்னால், அவர் தங்கள் நூலகத்தில் உள்ள பல்வேறு நூல்களைப் புரட்டிப் பார்த்து அதில் உள்ள தகவல்களைக் கிரகித்துக்கொண்டு அக்கட்டுரைகளை எழுதுவதில் திறமை மிக்கவராக இருந்தார்கள்.

ஆனால் இன்று தகவல் தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சி நம்நாட்டின் இளம் சந்ததியி னரின் சிந்திக்கும் திறனை சீர்குலைத்துவிட்டது என்பதை நாம் வேதனையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டி இருக்கின்றது.

இன்று நம்நாட்டு இளைஞர் யுவதிகளை சுயமாகச் சிந்தித்து இலக்கிய மற்றும் கற்பனைப் படைப்புக்களை உருவாக்கும் திறமையையும் இந்த தகவல் தொழில்நுட்பத்துறையின் வளரச்சி பெருமளவில் பாதிக்கச் செய்துள்ளது.

இன்றும் சுயமாக இலக்கிய மற்றும் கற்பனைப் படைப்புக்களை உருவாக்கும் திறமை மிக்க எழுத்தாளர்கள் இருந்தாலும், தங்களை எழுத்தாளர்கள் என்று அறிமுகம் செய்து கொள்பவர்களில் பெரும்பாலானோர் இணையத்தளங்களில் இருந்து வரும் பல கட்டுரைகளை ஒன்றிணைத்து அவற்றை தங்களின் சுயமாகச் சிந்திக்கும் திறனை மழுங்கச் செய்கின்றார்கள்.

இவ்விதம் வேதனையடைந்த நான் எனக்கு இருக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி பாடசாலைகளில் உள்ள நூலகங்களைப் புனரமைத்து புதுப்பிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் சோர்வுடன் வீடு திரும்பினேன்.

# பொருள் பணம் தரம்

# ஏமாறா ஏமாற்ற

விழிப்பூட்டப்பட்ட பாவனையாளர் பாதுகாக்கப்பட்ட பாவனையாளர் ஆவார்.

"சகல பிரசைகளும் பாவனையாளர்களே. பொருளாதாரத் துறையில் மிகப் பெரிய அடுக்காக அவர்கள் அமைவதோடு, அரச மற்றும் தனியார் ஆகிய எல்லாத் துறையிலும் தீர்மானங்களால் பாதிக்கப்படுபவர்களும் அவர்களே."


**ஜோன் எவ் கென்னடி**
**அமெரிக்காவின் முன்னாள் சனாதிபதி**

உலகத்தில் பிறந்த எந்த ஒரு மனிதனுக்கும் அவன் நுகர்கின்ற பொருளுக்குரிய தரத்தையும் தகவல்களையும் பெற்றுக்கொள்ள கூடிய உரிமை உள்ளது. இன்று இலங்கையில் நுகர்வோர் பாதுகாப்பிற்கு என்று ஒரு அதிகார சபை உள்ளது , அதற்க்கு அரசு வருடாவருடம் பல மில்லியன் ரூபா நிதியினை ஒதுக்கி செல-

பாவனையாளர் முறைபாட்டினை செய்வது எப்படி? அல்லது இது தொடர்பில் ஆர்வம் கொண்டுள்ள தரப்பினர்கள் தகவல்களைப் பெறுவது எப்படி?
முறைப்பாட்டினை அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திடம் ஆற்றுப்படுத்த வேண்டும்.
**பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை,**
**ச.தொ.ச. செயலகக் கட்டிடம்,**
**இல.27, வொக்ஷேல் வீதி,**
**கொழும்பு 02.**
**தொலைபேசி: 011-2393496**
வழங்கப்படும் சேவைகளுக்காக செலவினை ஏற்க வேண்டி நேரிடுமா?
இல்லை. முழுச் செலவையும் அதிகாரசபையே ஏற்கும்.

வழித்து வருகின்றது , குறித்த அதிகார சபையின் ஊடாக மக்களுக்கு பல்வேறு விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடாத்தியும் வருகின்றது ,இவை அனைத்துமே செவிடன் காதில் ஊதிய சங்காகவே" உள்ளது,, மக்கள் ஓரளவுக்கு விழிப்புணர்வுடன் இருந்தாலும் , இவர்களை ஏமாற்றி வியாபாரம் நடத்தும் கூட்டம் ஒழிந்த பாடில்லை எனவே பொது மக்கள் தாம் நுகரும் பொருள் குறித்து மிக கவனத்துடன் செயற்பட வேண்டும், இதற்காக இலங்கை நுகர்வோர் விவகார சபையின் செயற்திட்டங்க ளையும் , மக்களுக்கான விழிப்புணர்வையும் , நடவடிக்கைகளையும் கீழே தருகின்றோம்.

சந்தையில் பாலுணவுகள், இறைச்சியும் இறைச்சி சார்ந்த உற்பத்திகளும், மரபணு ரீதியான விருத்தி செய்யப்பட்ட உணவுகள், பழங்கள், குளிர் பானங்கள், உணவாகப் பாவிக்கக்கூடிய எண்ணெய் போன்ற பலவ-தமான பண்டங்கள் இருந்த போதிலும் துரதிட்டவசமாக பாவனையாளர்களுக்கு இவற்றில் அடங்கியுள்ள பொருட்கள் பற்றிய புரிந்துணர்வு இல்லையெனக் கூறலாம். சந்தைப் பொருளாதாரத்தில் உற்பத்தியாளர் தமது இலாபத்தை உச்ச அளவில் பெற முயற்சிப் பதால் இது பற்றி கரிசனை கொள்வதில்லை. பாவனை யாளரின் உயிருக்கோ உடல் நலத்திற்கோ பாதிப்பினை ஏற்படுத்தக்கூடிய மின்சார உபகரணங்களும் துணைப்பொருட்களும், எல். பி. கேஸ் சிலிண்டர், பற்றரி போன்ற பண்டங்க ளையோ சேவைகளையோ உற்பத்தி செய்யும் போது அதனோடு தொடர்புடைய நியமங்கள், அளவுக் குறிப்பீடுகள் மற்றும் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளைக் கூட உற்பத்தியாளர்கள் கருத்திற் கொள்வதில்லை. இதன் காரணமாக அத்தகைய பண்டங்கள் மற்றும் சேவைகளிலிருந்து திடீர் விபத்துக்கள் தோன்றுதல், செயற்கையான சுவையூட்டிகள் மற்றும் நிறங்கள் அடங்கிய காய்கறி, பழங்களைப் பாவிப்பதால் உடலுக் கும் உயிருக்கும் பாதகமான நிலைமைகள் தோன்றக் கூடும். இதற்கு மேலதிகமாக பாவனையாளர் களைப் பிழைவழி உய்க்கும் வர்த்தக விளம்பரங்களின் பிரச்சாரம் மூலமாக பாவனையாளர்களின் நடத்தைப் போக்குகளைத் துரிதமாக மாற்றுவதிலும் உற்பத்தியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.



மேலே குறிப்பிட்ட சிக்கல்களின் மத்தியில் பாவனயாளார்களால் பண்டங்களும் சேவைகளும் கொள்வனவு செய்யப்படுகையில் அவற்றில் உள்ளடங்கிய விபரங்கள் பற்றி கவனஞ் செலுத்த வேண்டியது மிகவும் முக்கியமான தாகும். அத்துடன் பாவனையாளர்கள் என்ற வகையில் தமது நோக்கங்களை ஈடேற்றுவதற்கான முறையான வேலைத்திட் டத்தை வகுத்துக்கொள் ளல் வேண்டும்.

சட்டங்களையும் பிரமா ணங்களையும் ஆக்கும் போதும் அவற்றை அமு லாக்கும் போதும் அரசாங்கம் மிக முக்கியமான பங்கினை வகிப்பதோடு பாவனையாளர் பாதுகாப்பு பற்றிய பிரமாணங்கள் பற்றிப் பாவனையாளர்கள் அறிந்திருக்க வேண்டியது அத்தியாவசியமான தாகும். எனவே பாவனையாளர் கல்வி என்பது முக்கியத்துவம் வகிக்கின்றது.



பாவனையாளர்களின் உரிமைகள், பாவனயாளரின் கடமைகள் மற்றும் பாவனையாளர்களின் பொறுப்புக்கள் தொடர்பான விளக்கத்தைப் பெற பாவனையாளர் தாம் கொள்வனவு செய்யும் பண்டங்கள் மற்றும் சேவைகள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ள, சந்தை நிலைமை பற்றி விளங்கிக் கொள்ள, சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரங்கள் மூலமாக வழங்கப்படு கின்ற தகவல்கள் பற்றி சரியாக அறிந்துகொள்ள பாவனையாளர் கல்வி காரணமாக அமைகின்றது.

பாவனையாளர் அலுவல் கள் அதிகாரசபையானது பாவனையாளர்களைப் பாதுகாப்பதற்காகவும் நியாயமான சந்தைப் போட்டியையும் ஏற்படுத்துவதற்காக இலங்கையில் இயங்கிவருகின்ற பிரதானமான நிறுவனமாகும். இது 2003 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்கமுடைய பாவனயாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டம் மூலமாகவே தாபிக்கப்பட்டது. பாவனையாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற அதே வேளையில் பண்டங்கள் மற்றும் சேவை வழங்குநர்களுக்கிடையில் போட்டிநிலைமையைக் கட்டியெழுப்ப [illegible]ச்-யமான சட்டமுறையான அதிகாரம் சட்டம் மூலமாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

### அதிகாரசபை சட்டத்தின் கீழான தவறுக்கான நடவடிக்கைகள்

ஏதேனும் பண்டத்தில் உள்ள சுட்டுத்தண்டு, விவரணம் அல்லது விலைக் குறிப்பை அகற்றுதல், மாற்றுதல், துடைத்தழித்தல், தேய்த்தழித்தல் அல்லது உருவழிக்கின்ற அல்லது அவ்வாறானவற்றைச் செய்த பண்டங்களை விற்பனை செய்கின்ற நிலைமை. *(பிரிவு 10)*

பண்டத்தின் உற்பத்தி, இறக்குமதி, சந்தைப்படுத்தல், களஞ்சியப்படுத்தல் சேமித்து வைத்தல், விற்றல் சம்பந்தமாக விடுக்கப்பட்ட பணிப்புரைகளை மீ[illegible]ல். *(பிரிவு 10)*

பண்டங்களுக்கு சுட்டுத்துண்டு ஒட்டுதல், விலை குறித்தல், பொதிகட்டுதல், விற்பனை செய்தல் தொடர்பில் விடுக்கப்பட்ட வேறேதேனும் பணிப்புரைகளை அமுலாக்கத் தவறுதல். *(பிரிவு 10)*




பணிக்கப்பட்ட விலைக்கு அல்லது குறிக்கப்பட்ட விலைக்கு மேலாக பண்டங்களை விற்பனை செய்தல். *(பிரிவு 11)*

அதிகாரசபையினால் விதித்துரைக்கப்பட்ட நியமங்களுக்கும் அளவுக் குறிப்பீடுகளுக்கும் அமைவாக பண்டங் களை உற்பத்தி செய்யவும் சந்தைப்படுத்தவும் தவறுதல் (பிரிவு 13)

அதிகாரசபையினால் விதித்துரைக்கப்பட்ட நியமங்களையும் அளவுக் குறிப்பீடுகளை யும் மீறுதல் அல்லது உற்பத்தியாளரால் அல்லது வியாபாரியால் வழங்கப்பட்ட கட்டுறுத்தல் களை மீறுதல். (பிரிவு 13)

உடன்பட்ட ஆகக்கூடிய விலை அல்லது நியமத்துடன் தொடர்புடையதாக பண்டங்களை வழங்குவதாக எவரேனும் உற்பத்தியாளர் அல்லது வியாபாரியுடன் அதிகாரசபை ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைகளின் நிபந்தனைகளை மீறுதல். (பிரிவு 14)

வியாபாரியால் தனதுடைமையில் அல்லது கட்டுக்காவலில் அல்லது கட்டுப்பாட்டில் வைத்துள்ள பண்டத்தை விற்க மறுத்தல். (பிரிவு 15)

வியாபாரியால் தனதுடைமையில் அல்லது கட்டுக்காவலில் அல்லது கட்டுப்பாட்டில் பண்டங்கள் இல்லையென மறுக்கப்படல் அல்லது நிபந்தனைக்கமைய விற்றல்.

# தே
# ாதே

(பிரிவு 16)எவரேனும் வியாபாரியால் வழமையான சொந்தத் தேவைகளுக்கு மேலதிகமாக எவையேனும் பண்டங்களை பதுக்கி வைத்தல். ***(பிரிவு 17)***

பண்டங்களுக்கு விலைகுறித்தல் அல்லது விலைப்பட்டி யலை வர்த்தக நிலை யத்தில் துலாம்பரமாக வெளிக்காட்டி வைக்காமை அல்லது அவ்வாறு செய்ய மறுத்தல். ***(பிரிவு 26)***

வியாபாரியொருவர் பாவனையாளரை பிழைவழி உய்கும் அல்லது ஏமாற்றும் இயல்புடைய நடத்தையில் ஈடுபடல். ***(பிரிவு 30)***

பண்டங்கள் அல்லது சேவைகள் குறிப்பிட்டவொரு நியமத்திலானது எனக் கூறுதல், பண்டங்கள் [illegible]வென பொய்யாகத் திரித்துக் காட்டுதல், விலையை அதிகரித்தல் அல்லது விலைக்குறைப்புக்கள் பற்றிய பொய்யான கூற்றுக்களை விடுத்தல் அல்லது அவ்வாறு பிழைவழி உய்க்கும் வேறு செயல்களில் ஈடுபடல். ***(பிரிவு 31)***

பண்டங்கள் அல்லது சேவைகளை வழங்குதல் தொடர்பான கட்டுறுத்தல்கள் (உத்தரவாதச் சான்றிதழ்) அல்லது அவற்றில் அடங்கியுள்ள நிபந்தனைகளை மீறுதல். ***(பிரிவு 32)***

போட்டியெதிர்ப்பு நடைமுறைகள் அல்லது தனியுரிமைச் செயற்பாடுகளில் ஈடுபடல். (பிரிவு 34)

அறிக்கைகள், ஆவணங்கள் மற்றும் தகவல்களை வழங்குமாறு அதிகாரசபை வேண்டுகோள் விடுக்குமிடத்து அத்தகவல்களை வழங்கத் தவறுதல் அல்லது தகவல்களை வழங்க மறுத்தல். ***(பிரிவு 57)*** அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற புலனாய்வுகளில் பங்கேற்கத் தவறுதல். ***(பிரிவு 57)***

**கேள்வி:** பாவனையாளர் முறைபாட்டினை செய்வது எப்படி? அல்லது இது தொடர்பில் ஆர்வம் கொண்டுள்ள [illegible]ப்பினர்கள் தகவல்களைப் பெறுவது எப்படி?
**[illegible]ல்:** முறைப்பாட்டினை அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்திடம் ஆற்றுப்படுத்த வேண்டும்.


மேந்து பைகள்

**முகவரி:**
**பாவனையாளர்**
**அலுவல்கள்**
**அதிகாரசபை,**
**ச.தொ.ச. செயலகக்**
**கட்டிடம்,**
**இல.27, வொக்ஷோல்**
**வீதி,**
**கொழும்பு 02.**
**தொலைபேசி: 011-2393496**

பணிப்பாளர் நாயகம்:
தொலைபேசி:
**011- 2302981**

பொது தொலைபேசி
இலக்கங்கள்:
**011-2445897/ 2393577 / 2393495**
பக்ஸ்: **011-2399148**

**மின்னஞ்சல்:**
chairmancaa@sltnet.lk / dgcaa@sltnet.lk

**கேள்வி:** பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை எவ்வாறு நிறுவப்பட்டது?
**பதில்:** 2003 இன் 09 ஆம் இலக்கமுடைய பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டம் மூலமாகவே பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை நிறுவப்பட்டது.

**கேள்வி:**பாவனையாளர் முறைப்பாடொன்றைச் செய்ய ஆளொருவர் ஏதேனும் சட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமா?
**பதில்:** இல்லை. எந்த ஒருவரும் முறைப்பாடு செய்யலாம்.
**கேள்வி:**:வழங்கப்படும் சேவைகளுக்காக செலவினை ஏற்க வேண்டி நேரிடுமா?
**பதில்:** இல்லை. முழுச் செலவையும் அதிகாரசபையே ஏற்கும்.

**கேள்வி:** நிகழ்கால சந்தை விலை மீது ஏதேனும் இடையீடு செய்யப்படுகின்றதா?
**பதில்:** ஆம். ஒரு சில அத்தி யாவசிய பண்டங்களின் விலைகளை அதிகரித் தல் மற்றும் விலை மேற்பார்வை செய்யப்படு கின்றது. 2003 மார்ச் மாதம் 17 ஆம் திகதியில் இருந்து அமுலாக்கப்பட்ட 2003 இன் 09 ஆம் இலக்க முடைய பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் 18 வது பிரிவின் கீழ் இது நடைமுறைப்படுத் தப்படுகின்றது.

**கேள்வி:** அநீதி இழைக்கப்பட்ட பாவனையாளர் ஒருவர் ஏதேனும் நிவாரணம் தேடும் போது பூர்த்தி செய்ய வேண்டிய தேவைகளாக அமைவது யாது?
**பதில்:**முறைப்பாட்டினை எழுத்தில் சமர்ப்பிக்க வேண்டும். சட்டத்தில் குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களுடன் சமாப்பிக்க வேண்டும்.

**கேள்வி:** எல்லா முறைப்பாடுகளையும் தலைமையத்திற்கே அனுப்பி வைக்க வேண்டுமா?
**பதில்:** இல்லை. எமக்கு மாவட்ட அலுவலக வலையமைப்பு உள்ளதோடு எந்தவொரு முறைப்பாட்டினையும் மாவட்ட அலவலகங்களுக்கும் சமாப்பிக்கலாம்.

**கேள்வி:** :பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் கீழ் சந்தை சுற்றிவளைப்புக்களும் புலனாய்வுகளும் மேற்கொள்ளப்படுகின்ற அடிப்படைப் பிரிவுகள் யாவை?
**பதில்:** 10, 11, 15, 16, 17, 18, 26, 28, 29, 30, 31, மற்றும் 61 ஆம் பிரிவுகள்.

***Complaints***

| Month | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | Total |
|---|---|---|---|---|---|---|---|
| January | 29 | 61 | 98 | 96 | 78 | 123 | |
| February | 24 | 92 | 109 | 112 | 119 | 166 | |
| March | 29 | 118 | 126 | 96 | 189 | 166 | |
| April | 31 | 61 | 85 | 92 | 116 | 190 | |
| May | 17 | 64 | 118 | 71 | 127 | 174 | |
| June | 38 | 109 | 116 | 74 | 107 | | |
| July | 39 | 112 | 69 | 112 | 148 | | |
| August | 59 | 121 | 127 | 129 | 129 | | |
| September | 55 | 134 | 89 | 93 | 119 | | |
| October | 55 | 100 | 108 | 110 | 79 | | |
| November | 34 | 101 | 65 | 139 | 69 | | |
| December | 52 | 98 | 90 | 216 | 72 | | |
| Total | 450 | 1171 | 1199 | 1318 | 1378 | 767 | |

***Fines (Rs.)***

| Month | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | Total |
|---|---|---|---|---|---|---|---|
| January | 0.00 | 863,700.00 | 2,956,700.00 | 2,680,750.00 | 2,776,000.00 | 1,626,500.00 | |
| February | 0.00 | 1,095,700.00 | 675,500.00 | 697,000.00 | 1,793,000.00 | 1,917,500.00 | |
| March | 14,000.00 | 1,060,500.00 | 1,947,550.00 | 1,097,000.00 | 1,102,500.00 | 1,364,500.00 | |
| April | 8,500.00 | 978,500.00 | 1,734,000.00 | 1,058,500.00 | 2,201,100.00 | 533,100.00 | |
| May | 99,500.00 | 545,000.00 | 1,501,500.00 | 1,667,500.00 | 2,574,500.00 | 2,253,500.00 | |
| June | 38,000.00 | 1,528,500.00 | 2,089,500.00 | 952,600.00 | 1,309,000.00 | | |
| July | 303,500.00 | 847,200.00 | 2,113,800.00 | 822,500.00 | 2,702,000.00 | | |
| August | 616,500.00 | 1,218,750.00 | 2,149,200.00 | 1,710,000.00 | 1,455,500.00 | | |
| September | 260,500.00 | 1,475,500.00 | 1,294,500.00 | 3,094,500.00 | 2,005,500.00 | | |
| October | 109,000.00 | 940,600.00 | 865,500.00 | 2,018,500.00 | 1,701,900.00 | | |
| November | 179,200.00 | 1,011,500.00 | 3,115,100.00 | 1,270,500.00 | 1,595,000.00 | | |
| December | 353,000.00 | 349,500.00 | 570,400.00 | 689,000.00 | 1,028,100.00 | | |
| Total | 1,921,700.00 | 11,314,950.00 | 20,407,250.00 | 17,892,950.00 | 22,178,100.00 | 7,095,100.00 | 80,809,450.00 |

***Raids***

| Month | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | Total |
|---|---|---|---|---|---|---|---|
| January | 12 | 200 | 189 | 186 | 305 | 119 | |
| February | 16 | 253 | 260 | 217 | 132 | 242 | |
| March | 23 | 215 | 256 | 295 | 597 | 594 | |
| April | 45 | 293 | 487 | 600 | 517 | 321 | |
| May | 38 | 212 | 225 | 214 | 190 | 330 | |
| June | 27 | 211 | 347 | 209 | 421 | | |
| July | 109 | 265 | 398 | 250 | 342 | | |
| August | 214 | 490 | 319 | 344 | 451 | | |
| September | 130 | 372 | 203 | 397 | 324 | | |
| October | 71 | 196 | 289 | 274 | 309 | | |
| November | 266 | 197 | 295 | 299 | 396 | | |
| December | 280 | 500 | 393 | 557 | 593 | | |
| Total | 1231 | 3284 | 3661 | 3716 | 4517 | 1546 | 17955 |

**நிறுவனத்தின் அடிப்படை பணிகள் யாவை?**



அநீதிக்கு இலக்காகிய பாவனையாளர்கள் அனுப்பிவைத்த முறைப்பாடுகளை நெறிப்படுத்தல்.

போட்டியெதிர்ப்பு நடைமுறைகள் மற்றும் நியாயமற்ற வியாபார நடைமுறைகள் சம்பந்தமாக வியாபாரிகள் முன்வைக்கும் முறைப்பாடுகளை நெறிப் எபடுத்தல்.

சந்தைப் புலனாய்வுகளையும் சந்தை ஆய்வுகளையும் நடாத்துதல்.

மக்கள் வாழ்க்கைக்கு அத்தியவசியமானவை-யென இனங்கண்ட பண்டங்களினதும் சேவைகளினதும் விலை-களைக் கட்டுப்படுத்தல்.

பாவனையாளர் ஒழுங்கமைப்புக்களை நிறுவ முதன்மைத்தானம் (முதலிடம்) வழங்கி பாவனையாளர்களுக்கு விழிப்பூட்டுதலும் வலுவூட்டுதலும்.

சுட்டுத்துண்டு ஒட்டுதல், பொதி செய்தல், விலை குறித்தல் சம்பந்தமாக வியாபாரிகளுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் பணிப்புரை விடுத்தல்.

அநீதி இழைக்கப்பட்ட வர்களுக்கு நிவாரணம் வழங்குதலும் தவறாளிகளுக்கு நீதிமன்றச் செயற்பாட்டினூடாக தண்டனை வழங்குதலும்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் கீழ் முதல் தடவையாக செய்த தவறுக்காக வியாபாரிக்கோ உற்பத்தியாள ருக்கோ எச்சரிக்கை செய்தல்.

**அதிகாரசபையின் தத்துவங்கள் யாவை?**

13 மற்றும் 32 ஆம் பிரிவுகளின் கீழ் விசாரணை மேற்கொள்ளப்படுகையில் சாதாரண நீதிமன்றத் தத்துவங்கள் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு உண்டு.

சட்டத்தில் குறிப்பிடப்பட்ட வரையறையின் கீழ் உற்பத்தியாளர்கள் அல்லது வியாபாரிகளுடன் உடன்படிக்கைகளை செய்துகொள்வதற்கான அதிகாரம் உண்டு.

மக்கள் வாழ்க்கைக்கு அவசியமானதென இனங்கண்ட குறித்துரைக்கப்பட்ட பண்டங்களின் விலைகள் பற்றிய ஒழுங்குவிதிகளை விதித்தல்.

பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் தொடர்பான நியமங்களையும் அளவுக் குறிப்பீடுகளையும் குறித்துரைத்தல். (இலங்கை தரக் கட்டளைகள் நிறுவகத்தினால் பணிக்கப்பட்ட நியமங்களையும் அளவுக் குறிப்பீடுகளையும் அமுலாக்கல்.)

வியாபாரிகளிடமிருந்து ஏதேனும் தகவல்கள் கோருகின்ற நீதிமன்றத் தத்துவம் உண்டு.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை சட்டத்தின் 58 வது பிரிவின் கீழ் பறிமுதல் செய்யப்பட்ட பண்டங்களை நீதிமன்றத்தின் அனுமதியின் பேரில் விற்பனை செய்யும் அதிகாரம் உண்டு.

சட்டத்தின் கீழ் நீதிமன்ற ஆட்சி எல்லைக்குட்பட்ட தவறாகக் கருதப்படுகின்ற தவறுகளுக்காக பிடியாணை இன்றி கைது செய்வதற்கான அதிகாரம் உண்டு.

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கமுடைய குற்றவியல் சட்டக் கோவைக்கிணங்க அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் சமாதான உத்தியோகத்தர்களாக செயலாற்றுவதற்கான அதிகாரம் உண்டு.

**ஆணைக்குழுவாள் எடுக்கப்பட்ட செய்முறைகள்:**

2003 இன் 09 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம் மூலமாக வியாபார தவறுகள் மற்றும் தவறான செயல்களில் ஈடுபடுகின்ற வியாபாரிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள போதுமானளவு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அத்துடன் அநீதிக்கு இலக்காகின்ற பாவனையாளர்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு அதிகாரசபைக்கு ஆற்றுப்படுத்துகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் நிவாரணம் அளிக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருவதோடு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தலைமையகம் மற்றும் மாவட்ட அலுவலக வலையமைப்பு கூட்டாக இணைந்து கடந்த சில வருடங்களில் மேற்கொண்ட சுற்றிவளைப்புக்கள் மற்றும் தீர்த்துவைக்கப்பட்ட முறைப்பாடுகள் பற்றிய தகவல்கள் மேலே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

**தொகுப்பு : ஜே.ஜே**



வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் மாவட்ட மட்டத்திலான விசேட தேவையுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் வடமாகாண பிரதி செயலாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.கல்வி வலய விசேட தேவையுடைய மாணவர்களின் பான்ட் வாத்திய அணிவகுப்பைத் தொடர்ந்து வடமாகாணத்திற்கு உட்பட்ட பன்னிரெண்டு கல்விக் கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகளின் விசேட தேவையுடைய மாணவர்கள் அணிவகுத்து வந்தார்கள்.

# ஒருவார காலத்தில் குடாநாட்டில் கொள்ளைச் சம்பவம் அதிகரிப்பு

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஒரு வாரகாலத்தில் கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார்.

யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறினார். இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை ஆகிய பொலிஸ் பிரிவுகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பெரும்பாலான கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

யாழ்.நகரத்தில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் 67 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதுடன் மனிப்பாய் வீதியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் 13 ஆயிரம் ரூபா பெறுதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று யாழ்.மாநகர சபைக்குச் சொந்தமான 20,000 ரூபா பெறுமதியான பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளமை தொடர்பில் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று கொடிகாமம் பகுதியில் வீதியால் சென்று கொண்டிருந்த பெண் ஒருவரின் தங்கச் சங்கிலி அறுக்கப்பட் டுள்ளதுடன் இச்சம்பவத்தடன் தொடர்புடைய நபர் கைது செய்யப்பட்டுள்ளார். த்ங்கச் சங்கிலியின் சிறிய பகுதி மீட்கப்பட்டுள்ளன என்றார்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச சொத்துக்களைப் பயன்படுத்தி தேர்தல்

## செல்வராஜா எம்.பி

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிலரால் தேர்தல் சட்ட விதிகள் மீறப்படுவதாக இலங்கை தமிழரசுக் கட்சி (தமிழ் தேசியக் கூட்டமைப்பு) நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராஜா குற்றம் சாட்டுகின்றார்.

மீள்குடியேற்ற துணை அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன், தான் கலந்து கொள்ளும் அரசாங்க பொது வைபவங்களில் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஆளும் கட்சியைச் சேர்ந்த இரண்டு வேட்பாளர்களுடன் கலந்து கொள்வதாக பொன் செல்வராஜா எம்.பி கூறுகின்றார்.

தேர்தலுக்கான, திகதி அறிவிககப்பட்டு ஒருவார காலததிற்குள் பட்டிருப்பு தொகுதியிலுள்ள இரண்டு பள்ளிக் கூடங்களில் புதிய கட்டட வேலைகளை ஆரம்பிக்கும் வைபவங்களில் கலந்து கொண்ட துணை அமைச்சருடன் குறித்த இரண்டு வேட்பாளர்களும் கலந்து கொண்டதாகவும் கூறும் அவர், இந்நிகழ்வுகளில் அவர்கள் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகைளை மேற்கொண்டதாகவும் கூறுகின்றார்.

# வெடி விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் பலி

நெலுவ பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பலியாகியுள்ளார்.

மாத்தறையை சேர்ந்த 51 வயதான சுனில் விபுலசிறி என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

லெல்வல பகுதியில் இடம்பெற்ற முற்றுகை நடவடிக்கையின்போது மற்றுமொரு பொலிஸ் உத்தியோகஸ்தரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததிலேயே இவர் பலியானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளுக்காக காலி பொலிஸ் அத்திட்சகர் யூ.எஸ்.பண்டாரநாயக்கவுடன் பொலிஸ் குழுவொன்று அப்பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

# சட்டவிரோத மதுபான தயாரிப்பு நிலையம் முற்றுகை

சட்டவிரோத மதுபான தயாரிப்பு நிலையம் ஒன்றை முற்றுகையிட்ட பொலிஸார் அங்கிருந்த இருவரைக் கைது செய்துள்ளனர்.

மாறவில, அளப கலப்புவ பிரதேசத்தில் இயங்கி வந்த சட்டவிரோத மதுபான தயாரிப்பு நிலையம் ஒன்றே இதன் போது சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

இந்த சுற்றிவளைப்பின் போது சட்டவிரோத மதுபான போத்தல்கள் 130 பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் மாறவில பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# அதிபர் பலி

கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்ட நிலையில் பாடசாலை அதிபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொல்லப்பட்டுள்ளார்.

காலி, யக்கல்ல முள்ள, மினுவந்தெனிய கனிஷ்ட வித்தியாலய அதிபரே இவ்வாறு கொல்லப்பட்டவராவர். தனிப்பட்ட பிரச்சினை காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த அதிபரின் மகனுக்கும் பிறிதொரு குழுவிற்கும் இடையில் சச்சரவு மூண்டுள்ளது.

# சட்டவிரோத அவுஸ்ரேலியப் பயணம்: கைதான 51 பேருக்கும் விளக்கமறியல்

நீர்கொழும்பிலிருந்து சட்ட விரோதமாக அவுஸ்திரேலியா செல்ல முயன்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்ட 51 பேரையும் அடுத்த மாதம் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு பிரதான நீதவான் ஏ.என்.எம்.பி.அமரசிங்க நேற்று முன்னதினம் உத்தரவிட்டார்.

சிலர் அவுஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமாக செல்ல முற்படுவதாக கடற்படையினருக்கு கிடைத்த தகவலையடுத்து 31 பேர் நீர்கொழும்பு கடற்பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின்போது மற்றுமொரு குழுவினர் அவுஸ்திரேலியா செல்லும் முகமாக குறித்த படகில் ஏறுவதற்கு நீர்கொழும்பிலுள்ள வீடொன்றில் தங்கியிருப்பதாகத் தெரியவந்தது. இதனையடுத்து அவ்வீட்டிலிருந்த 20 பேரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். இவ்வாறு கைதானவர்களை பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்திய வேளையில் மேற்படி விளக்கமறியல் உத்தரவை நீதிமன்றம் வழங்கியது.

# கற்றல் துணைச் சாதனங்கள் வழங்கல்

(மருதனார்மடம்)

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் துரித 'கற்றல் செயற்றிட்டம் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு கல்வி செயற்றிட்ட அலுவலர் திருமதி ச.ராதிகா கற்றல் துணைச் சாதனங்களை சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் வலயக் கல்விப் பணிப்பாளர் முன்னிலையில் வழங்கினார்.

சிறுவர் பாடல்கள் அடங்கிய நூல், பாடல்கள் மற்றும் படங்கள் அடங்கிய இறுவட்டு, சிறுவர் கதைக்களஞ்சிய நூல்கள் என்பன மேற்படி நிகழ்வின்போது வழங்கப்பட்டன.

இந்தச் செயற்றிட்டம் கல்வியில் பின்னடைவான மாணவர்களை ஊக்குவிக்குமுகமாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (01)

## வடக்கு, கிழக்கில் முதலாவதாக:

# வாழ்வகத்தில் இன்று ஒலி நூலகம் திறப்பு

வடக்கு, கிழக்கில் முதற் தடவையாக நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒலி நூலகம் யாழ்ப்பாணம், சுன்னாகத்தில் உள்ள விழிப்புலன் வலுவழிந்தோருக்கான வாழ்வகத்தில் இன்று மாலை 4 மணியளவில் திறந்து வைக்கப்படுகிறது.

வாழ்வகத்தின் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தத் திறப்பு விழாவில், செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் கலந்துகொண்டு நூல் நிலையத்தை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கிறார்.

லண்டனைத் தலைமையமாகக் கொண்டு இயங்கும் யாழ். விஷன் நிறுவனத்தினரின் அனுசரணையுடன் பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஒலி நூலகத்தின் திறப்பு விழாவில் அந்நிறுவத்தின் தலைவர் சுசீந்திரன் மற்றும் அதன் அங்கத்தவர் திருமதி அருணா சுசீந்திரன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொள்கின்றனர்.

சபாபதிப் பிள்ளை வீதி, சுன்னாகம் என்ற முகவரியில் இயங்கி வரும் வாழ்வகம் நிறுவனமானது, விழிப்புலன் இழந்தோருக்கான பல்வேறு உன்னத சேவைகளை ஆற்றி வருகிறது.

குறிப்பாக பல்வேறு காரணங்களாலும் விழிப்புலன் வலுவிழந்தோரை பேணிப்பாது காத்து வருவதுடன் அவர்களுக்கான கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட சகல வாழ்வாதாரங்களையும் வழங்கி வருகிறது.

# மொபைல் போன்களின் ரகசிய குறியீட்டு எண்கள்




**Nokia ரகசிய குறியீட்டு எண்கள் என்றால்..?**

ரகசிய குறியீட்டு எண்கள் என்பது தங்கள் போன்களில் உள்ள சில தகவல்களையும், இரகசிய தகவல்களையும் பற்றி தெறிந்து கொள்ள பயன்படும் குறியீட்டு எண்கள்.

Nokia மொபைல் போன்களில் ரகசிய குறியீட்டு எண்கள்:

*#0000# - தங்கள் மொபைல் போனின் software. தகவல்களை தெரிந்துக்கொள்ள.

*#06# - போனின் International Mobile Equipment Identity No அதாவது EMI NO தெரிந்து கொள்ள.

*#21# - தங்கள் போனில் Call Divert செய்துயிருந்தால் தாங்கள் Divert செய்த மொபைல் போனில் எண்ணை காண.

*#92702689# -முக்கிய ஒன்று தங்கள் போனின்

1. Serial Number.
2. உருவாக்கபட்ட நாள்,
3. சந்தைக்கு வந்த நாள்,
4. கடைசியாக மொபைல் போனை Repair செய்த நாள் (0000 என்றால் no repairs),
5. மொபைல் போனின் LIfe Timer ஆகியவற்றை காணலாம்..

Refresh Ur Phone means Switch off then Switch On.

*#2820#- தங்கள் போனின் Bluetooth தகவலை பற்றி தெரிந்துக்கொள்ள.

*#2820# - Bluetooth Deviceயின் addressia பற்றி தெரிந்துக்கொள்ள.

*#delset# - தங்கள் போனின் MMS/GPRS Settings அழிக்க / நீக்க

*#73# - தங்கள் போனின் games மற்றும் நேரத்தை Reset செய்ய

*#7780# - Restore Factory Settings யை மேற்கொள்ள... அதாவது தங்கள் போனை பழைய நிலைக்கு கொண்டு வர.

*#7328748263373738#- தங்கள் போனின் Security Codeia Reset செய்ய...

தங்கள் Nokia போனின் Default security Code 12345


தங்கள் மொபைல் போனில் தொடரந்து "0" வை அழுத்திக் கொண்டே இருந்தால் தங்கள் மொபைல் போனின் Home Page திறக்கும்.




ஒருவர் நமக்கு இமெயில் அனுப்பியுள்ளார் என்றால் அந்த இமெயில் எந்த நாட்டில் எந்த பகுதியில் இருந்து வந்தது என்று எளிதாக கண்டு பிடிக்கலாம்.

ols/visual-tracert/

இந்த தளத்திற்கு சென்று நாம் Copy செய்து வைத்திருக்கும் IPஜ முகவரியை கொடுக்கவும் சில நிமிடங்களில் அதுவும் உடனடியாக கூகுள் மேப்பிலே




# எங்கிருந்து வந்திருக்கு இந்த ஈ.மெயில்

ஒருவர் நமக்கு இமெயில் அனுப்பியுள்ளார் என்றால் அந்த இமெயில் எந்த நாட்டில் எந்த பகுதியில் இருந்து வந்தது என்று எளிதாக கண்டுபிடிக்கலாம்


ஒருவரின் இமெயில் முகவரி மூலம் இருக்கும் இடத்தை சிலநிமிடங்களிலே கண்டுபிடிக் கலாம். நமக்கு ஒருவர் இருக்கும் இடத்தை

கண்டுபிடிக்க வேண்டுமானால் அந்த நபர் நமக்கு சமீபத்தில் அனுப்பிய இமெயில் முகவரியை திறந்தது அதில் இருக்கும் Show Original என்பதை தேர்ந்தெடுத்து அதில் உள்ள Sender ip என்பதை Copy செய்து கொள்ளவும். இந்த IP முகவரியை இந்த இணையதளத்தில் சென்று கொடுத்தால் போதும் உடனடியாக கண்டு பிடிக்கலாம்.

இணையதள முகவரி : http://www.yougetsignal.com/to

அனுப்பியவரின் இடத்தை காண்பிக்கும். சில நிறுவனங்கள் இதை வைத்துக்கொண்டு தான் இமெயில் முகவரியை மட்டும் கொடுங்கள் இருக்கும் இடத்தை சொல்கிறோம் என்கிறது. இது எப்படி சாத்தியம் என்றால் சில இணையதளங்களில் சென்று நாம் ஒரு இமெயில் முகவரியை கொடுத்தால் கடைசியாக அவர் Access செய்த IP முகவரியை எளிதாக எடுத்துக்கொடுக்கும் உடனடியாக இவர்கள் அந்த முகவரியை இங்கு கொடுத்து இருக்கும் இடத்தை கண்டுபிடிக் கின்றனர்.

உதாரணமாக நாம் நம் நண்பர் ஒருவர் அனுப்பிய IP முகவரியை கொடுத்துப் பார்த்தோம் சரியாக இருக்கும் இடத்தை காட்டியது. கண்டிப்பாக இந்த தளம் நமக்கு பயனுள்ளதாக இருக்கும்.




# Sony Ericsson Theme Creator

நம் மொபைல் போனை மற்றவர்கள் பார்க்கும் போது அழகாகவும், உபயோகிக்க சுலபமாகவும் இருக்கவேண்டும் என்று நினைப்போம். அதற்காக பல Theme களை இணையத்திலிருந்து தரவிறக்கம் செய்து உபயோகப் படுத்துவோம். ஆனால் அது நமக்கு முழுமையாக பிடிக்குமா என்று கேட்டால் நிச்சயமாக இல்லை என்று தான் சொல்ல வேண்டும்.

ஆனால் Sony Ericsson பொறுத்தவரை நமக்கு அந்த கவலை' இல்லை, Sony Ericsson Developers நமக்காக Sony Ericsson Theme Creator என்ற மென்பொருளை வடிவமைத்து வழங்கியுள்ளார்கள்.

Sony Ericsson Theme Creator மென்பொருளை பயன்படுத்தி. நமக்கு வேண்டிய படங்களை யும், பாடல்களையும், வண்ணங் களையும் நமக்கு வேண்டிய இடத்தில் பயன்படுத்திக் கொள் ளலாம்.

# Gmail இல் அனுப்பிய மின்னஞ்சலை திரும்ப பெறுவதற்கு

நீங்கள் ஜிமெயிலில் மின்னஞ்சல் அனுப்பும் போது தவறுதலாக ஏதே பிழையுடன் அனுப்பினால் உடனேயே உங்கள் மின்னஞ்சலை திரும்ப பெற்றுக் கொள்ளும் வசதி உள்ளது.

உதாரணமாக நீங்கள் ஜிமெயிலில் இருந்து உங்கள் அலுவல கத்துக்கு மின்னஞ்சல் அனுப்புகிறீர்கள், அப்பொழுது தகவல் மட்டும் அதனுடன் தொடர்புடைய ஆவணத்தையும் அனுப்ப வேண்டும்.

அதற்கு பதிலாக நீங்கள் தகவலை மட்டும் அனுப்பி விடுகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். இந்த மாதிரியான நேரத்தில் தவறுதலாக அனுப்பிய மின்னஞ்சலை பெறுவதற்கு என்றே ஜிமெயில் ஒரு சேவையை வழங்குகிறது.

அதை பயன்படுத்த கீழே குறிபிட்டுள்ளதை, செய்யவும்:

1. உங்கள் ஜிமெயில் மின்னஞ் சல் பெட்டியில் வலது பக்கத்தில் "Mail settings" கிளிக் செய்யவும்.

2. பிறகு "settings" ல் "Labs" என்றுள்ளதை கிளிக் செய்யவும்.

3."Available labs" கீழ் கொடுக்கப்பட்டுள்ள "Undo




Sent" பக்கத்தில் உள்ள "enable" பொத்தானை கிளிக் செய்யவும்.

நீங்கள் தவறுதலாக அனுப்பும் பட்சத்தில், நீங்கள் செய்ய வேண்டியது Your message has been sent என்னும் வாக்கியத்துக்கு பக்கத்தில் உள்ள "Undo" லிங்க்கை கிளிக் செய்யவும். உங்களது மின்னஞ்சலை திரும்ப பெற்றுக் கொள்ளலாம்.

# கணிணியில் இயங்கும் மென்பொருள்களை யாரும் பார்க்காமல் மறைக்க...

கணிணியை பொதுவான இடங்களில் பயன்படுத்தும் பலரும் சந்திக்கின்ற பிரச்சினை, நாம் திறந்து வைத்திருக்கும் மென்பொருள்களை யாராவது பார்த்து விடுவார்களோ என்ற பயம் வருவது தான்.

யாராவது வரும் போது சட்டென்று தேவையில்லாத மென்பொருள்களை மறைத்து வைத்து விட்டால் அவர்கள் சென்ற பின்னர் மறுபடியும் திறந்து கொள்கிற மாதிரி வசதியுடைய மென்பொருள்கள் இரண்டைப் பார்ப்போம். இந்த மென்பொருள்களை நாம் சிறிது நேரம் வெளியே செல்லும் போதும் போட்டு விட்டுச் செல்லலாம். எந்த மென்பொருளும் யார் கண்களுக்கும் புலப்படாதிருக்கும் Task Bar இல் கூட உட்கார்ந்திருக்காது. அதே போல சிலர் புத்திசாலியாய் ALT+TAB பட்டன்களை அழுத்துவதன் மூலம் தற்போது திறந்து வைத்திருக்கிற புரோகிராம்களைப் பார்க்கலாம். இதில் அந்த வேலையும் நடக்காது.

## 1.NCS WinVisible

இந்த மென்பொருளில் ஒரு குறுக்கு விசையை (Shortcut Key) அழுத்துவதன் மூலம் அனைத்து மென்பொருள்களையும் இந்த மென்பொருள் உட்பட ஒரே விநாடியில் மூட முடியும். முன்னரே வேண்டாத புரோகிராம்களைத் (யாரும் பார்க்க்கூடாத) தேர்வு செய்து கொள்ள வேண்டும். இதில் ஒவ்வொரு மென்பொருளாகவும் மறைக்க முடியும்.

இதன் Settings பகுதியில் சென்று Hot keys இல் உங்களுக்குப் பிடித்த குறுக்கு விசையை அமைத்துக் கொள்ளலாம். மேலும் இந்த மென்பொருள் எப்போதும் Hidden NyNa இருக்கும்படியும் செய்யலாம். Settings- General - Behaviour பகுதியில் இருக்கும் மூன்று அமைப்புகளையும் தேர்வு செய்து கொள்ளுங்கள்.

Automatically check new processes,
Remember the processes I checked,
Hide Application and Tray icon

**தரவிறக்கச்சுட்டி** : Download WinVisible

## 2.Hide It

எளிமையான நிறுவத் தேவையில்லாத மென்பொருள் இது. டெஸ்க்டாப்பில் இருக்கும் ஐகான்களைக் கூட இது மறைக்கும். Task bar இல் இருக்கும் இதனைத் திறந்து எளிமையாக ஒரே கிளிக்கில் ஒவ்வொரு மென்பொருளாக அல்லது அனைத்து மென்பொருளையும் விநாடியில் மறைக்கலாம்.

இதன் இன்னொரு வசதி என்னவென்றால் தேவையான புரோகிராம்களை மறைத்து விட்டு இந்த மென்பொருளையும் Exit கொடுத்து மூடிவிடலாம். பிறகு கொஞ்ச நேரம் கழித்து இந்த மென் பொருளைத் திறந்து மறைந்துள்ள புரோகிராம்களைத் திறந்து கொள்ளலாம்.

இதை ஸ்நோபால் சொல்லி முடிப்பதற்கும், கொஞ்ச நேரமாக என்னவோ போல இருந்த மூன்று பசுக்களும் உரக்கக் கூவத் தொடங்குவதற்கும் சரியாக இருந்தது. இருபத்து நாலு மணி நேரமாகப் பால் கறக்கப்படாதிருந்த அவை மடிகள் நிரம்பி வெடித்துவிடும் போல இருந்ததனால் இப்படிக் கத்தின.

சிறிது நேரம் யோசனை செய்து விட்டு பன்றிகள் வாளிகளைக் கொண்டுவரச் சொல்லி,சுமாராக வெற்றிகரமாக மாடுகளைக் கறந்து விட்டன. பன்றிகளின் முன்னங் கால்கள் இந்தக் காரியத்துக்கு ஓரளவு ஏற்றவையாக இருந்தன என்றுதான் சொல்ல வேண்டும். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் ஐந்து வாளிகள் நிறைய நுரையுடன் வெண்மையான பால் கறந்தாகி விட்டது. பல மிருகங்கள் இந்தப் பாலை அதிகக் கவனத்துடன் பார்த்தன.

"இத்தனை பாலும் என்ன ஆகப் போகிறது?" என்று ஏதோ ஒரு மிருகம்

16




கேட்டது. "எங்கள் உணவில் சில சமயம் ஜோன்ஸ் பாலைக் கலந்து தருவது வழக்கம்" என்று பெட்டைக் கோழிகளில் சில சொல்லி வைத்தன. நெப்போலியன் பால் வாளிகளுக்கு முன் போய் நின்றுகொண்டு சொல்லிற்கு., "தோழர்களே! இப்போது இந்தப் பாலைப் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அதைக் கவனித்துக் கொள்ள ஆள் இருக்கிறது. புல் அறுவடைதான் இப்போது மிக மிக முக்கியமான காரியம். தோழர் ஸ்நோபால் வழிகாட்டும். இன்னும் சில நிமிட நேரத்தில் வந்துவிடுவேன். முன்னேறுங்கள் தோழர்களே, புல் அறுடைக்கு முன்னேறுங்கள்."


உடனே அறுவடையைத் தொடங்க விலங்குகள் எல்லாம் கூட்டமாகப் புல் வயலை நோக்கி ஆர்வத்துடன் கிளம்பின. மாலையில் அவை திரும்பி வந்தபோது வாளிகளிலிருந்த பால் எங்கேயோ மறைந்து விட்டது. புல்லை அறுவடை செய்து கொண்டுவந்து சேர்க்க மிருகங்கள் எவ்வளவு பாடுபட்டன?

ஆனால் அவ்வளவு பாடும் வீணாகவில்லை. பலன் தந்தது என்றுதான் சொல்ல வேண்டும். அவை எதிர்பார்த்ததைவிட அதிகமாகப் புல் அறுவடையாயிற்று. சில சமயம் வேலை மிகவும் கடினமாகத்தான் இருந்தது. மனிதர்களுக்காகச் செய்யப்பட்ட ஆயுதங்களைக் கொண்டு வேலை செய்வது என்றால் விலங்குகளுக்குச் சிரமமாகத்தானே இருக்கமுடியும்.

பின்னங்கால்களால் நிமிர்ந்து நின்று கொண்டு உபயோகிக்க வேண்டிய ஆயுதம் எதையும் மிருகங்களால் உபயோகிக்க உபயோகிக்க முடியவில்லை. எவ்வளவு சிரமமான பிரச்சினையையும் தீர்த்து வைத்துவிடக்கூடிய சாமர்த்தியம் பன்றிகளுக்கு இருந்தது. என்ன சங்கடம் வந்தாலும் அதற்கு ஒரு வழி கண்டுபிடித்து முன்னேறும் சாமர்த்தியம் அவற்றிற்கு இருந்தது.

**(நாளை...)**

## வரைவோம் வாருங்கள்!



## மணல் எப்படி வந்தது?



**மணல்** என்பது, உடைந்த பாறைத் துண்டுகளையும் கனிமத் துணிக்கைகளையும் கொண்ட, இயற்கையில் கிடைக்கும் மணியுருவான பொருள் ஆகும். மணல் உருவாகும் இடத்தில் உள்ள பாறை வகைகள், பிற நிலைமைகள் என்பவற்றைப் பொறுத்து மணலின் சேர்மானங்கள் பெருமளவு வேறுபட்டுக் காணப்படுகின்றன. எனினும், மணலின் முக்கியமான கூறு சிலிக்கா ஆகும். நிலவியலாளர்களின் வரைவிலக்கணப்படி மணல் துணிக்கைகள் 0.0625 மில்லிமீட்டர் தொடக்கம் 2 மில்லிமீட்டர்கள் வரையான விட்டங்களைக் கொண்டவை.

## மான்



இலங்கையில் திருகோணமலையில் அதிகமாக மான்கள் காணப்படுகின்றன. மான் பாலூட்டி வகையைச் சேர்ந்தது. இது ஒரு காட்டு விலங்கு. இவை இலை தழைகளை உண்ணும் இலையுண்ணி விலங்குகள். மான் ஆடு, மாடுகள் போல உண்ட உணவை இரு நிலைகளில் செரிக்கும் அசைபோடும் விலங்கு. மான்கள் உலகில் ஆஸ்திரேலியா, அண்டார்டிக்காவும் தவிர மற்ற எல்லா இடங்களிலும் வாழ்கின்றன. பார்ப்பதற்கு மிகவும் சாதுவாக இருக்கும். மான்களில் புள்ளிமான், சருகுமான், சம்பார் மான், கவரிமான் என நிறைய வகைகள் உள்ளன. கனடாவிலும் சைபீரியா முதலிய வடநிலப் பகுதிகளிலும் வாழும் மூசு அல்லது எல்க் என்னும் மான் இனம் உண்டு. இதுதான் உலகிலேயே மிகப் பெரிய மான் இனம் ஆகும். இவற்றின் ஆண் மூசு, 2 மீட்டர் உயரமும் 540 - 720 கிலோ கிராம் எடையும் உடையது.

மான்களில் பொதுவாக ஆண் மான்கள் மட்டுமே அழகான கொம்புகளைக் கொண்டிருக்கும். கொம்புகள் கிளைத்து இருக்கும். ஆண் மானுக்கு கலை என்று பெயர் பெண்மானுக்கு சிறிய கொம்புகளோ அல்லது அவை இல்லாமலோ இருக்கும். பெண்மானுக்குப் பிணை என்று பெயர். மானின் குட்டிகளை மான்மறி என்று அழைப்பர்.

**குழந்தைகளே!**

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# சிறுவர் அமுதம்

## மழைக் காலம்




குடை பிடித்துச் செருப்புமிட்டுப்
புத்தகமுங் கொண்டு
குடுகுடென நடந்து வரும்
குழந்தைகளே கேளீர்

மழைக் காலம் வழி வழுக்கும்
மிகக் கவனம் மக்காள்
வழியருகே வெள்ளமுண்டு
விலகி வரல் வேண்டும்

வெள்ளத்தில் கல்லெறிந்து
விளையாடல் வேண்டாம்
வீண் சண்டையால் வழுக்கி
விழுந்தெழும்ப வேண்டாம்

கண்மணிகாள் நீர்ச்சிரங்கு
காலில் வரும் கவனம்
கண்ணுறக்கம் இன்றியிராக்
கத்த வரும் கவனம்

## உலகை அறிவோம்




1.பயணித்த தூரத்தை அறிய வாகனங்களில் பயன்படும் கருவி எது?

2.ஆங்கில அகராதியை உருவாக்கியவர் யார்?

3.சனிக்கிரகத்தின் நிறம் என்ன?

4.செஞ்சிலுவைச் சங்கம் எப்போது தொடங்கப்பட்டது?

5.உலகிலேயே மிகப் பெரிய நூலகம் உள்ள நாடு எது?

விடைகள்

1.ஓடோ மீற்றர் 2.டாக்டர் ஜோன்சன் 3.மஞ்சள் 4.1920 5.அமெரிக்கா

**சுடோக்கு எண் 18 விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 1 | 5 | 7 | 2 | 9 | 3 | 8 | 4 |
| 7 | 9 | 4 | 5 | 3 | 8 | 2 | 1 | 6 |
| 3 | 2 | 8 | 6 | 1 | 4 | 7 | 5 | 9 |
| 1 | 7 | 3 | 8 | 6 | 5 | 4 | 9 | 2 |
| 2 | 8 | 6 | 9 | 4 | 3 | 5 | 7 | 1 |
| 5 | 4 | 9 | 2 | 7 | 1 | 8 | 6 | 3 |
| 4 | 6 | 2 | 1 | 5 | 7 | 9 | 3 | 8 |
| 8 | 3 | 7 | 4 | 9 | 6 | 1 | 2 | 5 |
| 9 | 5 | 1 | 3 | 8 | 2 | 6 | 4 | 7 |

**சுடோக்கு எண் 19**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | 8 | | 7 | | | | |
| 9 | | 3 | | | 5 | | | |
| 6 | 5 | | 9 | 8 | | 1 | | |
| | 9 | | | | | 3 | | 4 |
| 7 | | | | | | | | 5 |
| 5 | | 4 | | | | | 6 | |
| | | 5 | | 6 | 2 | | 4 | 1 |
| | | | 8 | | | 2 | | 3 |
| | | | | 4 | | 6 | 8 | |

# ஆலய உற்சவ நிகழ்வுகள்

## நாளை குப்பிளான் கற்பக விநாயகர் தேர்த் திருவிழா

(மருதனார்மடம்)

குப்பிளான் வடக்கு கற்கரை கற்பக விநாயகர் திருக்கோயிலின் வருடாந்த மகோற்சவம் கடந்த 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு தேர்த் திருவிழாவும், புதன்கிழமை பகல் 11.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

மகோற்சவத்தையொட்டிய சிறப்பு அம்சமாக தினமும் பகல் 11.00 மணியளவில் சமயச் சொற்பொழிவும் இடம்பெற்று வருகிறது. இன்று 30ஆம் திகதி சிவத்தமிழ் கொண்டல் கு. பாலசண்முகன் சொற்பொழிவாற்றுகிறார்.(01)

## மாசியப்பிட்டி அம்பாள் தேர்த்திருவிழா

(மருதனார்மடம்)

மாசியப்பிட்டி அங்கணாக்கடவை கண்ணகி அம்பாள் மீனாட்சி அம்பாள் ஆலய மகோற்சவப் பெருவிழா கடந்த 23ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு தேர்த் திருவிழாவும், புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

## செயலமர்வு

(மருதனார்மடம்)

க.பொ.த சாதாரண தர மாணவர்களது சைவசமயம் கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை அதிகரிக்கும் வகையில் பன்னிரண்டு கல்வி வலயங்களிலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை ஆசிரிய ர்களுக்கும், சைவ சமய ஆசிரிய ஆலோசகர்களுக்குமான செயலமர்வு இன்று காலை 8.30 மணி தொடக்கம் மருதனார் மடத்திலுள்ள வடமாகாணக் கல்வித் திணைக்க ளத்தின் கேட்போர் கூடத்தில் மேற்படி செயலமர்வு இடம்பெறும்.

## கொற்றாவத்தை ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவம்

(வல்வெட்டித்துறை)

கொற்றாவத்தை அயிட்டியப் புலம் அருள்மிகு முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 24ஆம் திகதி (செவ்வாய்க் கிழமை) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், நாளை செவ்வாய்க் கிழமை மாலை 7.00 மணிக்கு சப்பறத் திருவிழாவும், ஆகஸ்ட் முதலாம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் வியாழக் கிழமை காலை 6.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெற விருப்பதுடன் ஆகஸ்ட் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 7.00 மணிக்கு இடம்பெறும் பூங்காவனத் திருவிழாவுடன் இவ் வருட உற்சவம் நிறைவுபெறுகிறது.

## அல்வாய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் மகோற்சவம்

(வல்வெட்டித்துறை)

அல்வாய் வேவிலந்தை அருள் மிகு முத்துமாரி அம்மன் தேவஸ்தான மகோற்சவம் கடந்த 18ஆம் திகதி (புதன்கிழமை) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இன்று திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், மாலை 7.00 மணிக்கு சப்பரத் திருவிழாவும், நாளை (செவ்வாய்க்கிழமை) காலை 9.00 மணிக்கு தேர்த் திருவிழாவும், ஆகஸ்ட் முதலாம் திகதி (புதன் கிழமை) காலை 6.00 மணிக்கு சமுத்திர தீர்த்தத் திருவிழாவும், மறுநாள் (வியாழக்கிழமை) பூங்காவனத் திருவிழாவும் இடம் பெறும்.

மகோற்சவ காலத்தின்போது தினமும் மாலை 6.00 மணிக்கு தெய்வீகப் பேருரையும் தொடர்ந்து வசந்த மண்டப பூசையும் நடை- பெற்று அம்பிகை வீதியுலா வருதலும் இடம்பெற்று வருகிறது. (01)

## ஸ்ரீ முத்துமாரி அம்பாள் அலங்கார உற்சவம்

(மருதனார்மடம்)

வசாவிளான் கோணாவளைப்பதி திருவருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் திருக்கோயில் அலங்கார உற்சவப் பெருவிழா நடைபெற்று வருகின்றது. எதிர் வரும் முதலாம் திகதி புதன் கிழமை தீர்த்தத் திருவிழாவும் அடியார்களின் பாற்குட பவனியும் இடம்பெறவுள்ளது. தினமும் இரவு 7.00 மணிக்கு சைவசித்தாந்த கலாநிதி சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன் "அபிராமி அந்தாதி " எனும் தலைப்பில் சொற்பொழி வாற்றி வருகின்றார்.

மேற்படி ஆலய முன்றலில் புதிதாக கலையரங்கம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இதன் திறப்புவிழா நாளை (செவ்வாய்க் கிழமை). மாலை நடைபெறு வதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளது என பரிபாலன சபை செயலாளர் எஸ். முத்துலிங்கம் தெரிவித்துள்ளார். (01)

## ஊரெழு சைவாலய முன்னேற்றக் கழகம் நடத்திய சமய அறிவுப் போட்டி முடிவுகள்

(உடுவில்)

ஊரெழு கிளானைப்பதி பர்வத வர்த்தனி என வழங்கும் மனோன் மணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவத்தினை முன்னிட்டு, ஊரெழு சைவாலய முன்னேற்றக் கழகம் ஏற்பாடு செய்து நடத்திய சமய அறிவுப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பின்வருவோர் பரிசில்களைப் பெறுகிறார்கள்:

தரம் 4 மாணவர்களுக்கான பிரிவில் முதலாம் இடம்- தனபாலசிங்கம் தனேஸ்வரன் (யா/வயாவிளான் வேலுப்பிள்ளை வித்தியாலயம்), இரண்டாமிடம்- சாளி சுதாகரன் (யா/ஊரெழு கணேச வித்தியாலயம்), மூன்றாமிடம்- கனகரத்தினம் கின்சன் (யா/ஈவினை அ.த.க.பாடசாலை), சிவானந்தன் கானுசன் (யா/புன்னாலைக் கட்டுவன் சித்திய விநாயகர் வித்தியாலயம்).

தரம் 5 மாணவர்களுக்கான பிரிவில் முதலாமிடம்- அபிரா சிவராசன் (யா/வயாவிளான் வேலுப்பிள்ளை வித்தியாலயம்), இரண்டாமிடம்- தயாளரூபினி குமாரசாமி (யா/இணுவில் மத்திய கல்லூரி), மூன்றாமிடம்- தயாளநீதினி குமாரசாமி (யா/இணுவில் மத்திய கல்லூரி).

தரம் 6 மாணவர்களுக்கான பிரிவில் முதலாமிடம்- தேனுஜா ரகு, இரண்டாமிடம்- சண்முகராசா தனோஜிதன், மூன்றாமிடம் - சுவேதா மகேஸ்வரன் (இவர்கள் மூவரும் யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த வர்கள்).

தரம் 7 மாணவர்களுக்கான பிரிவில் முதலாமிடம்- தனுஷா விஜயகாந்தன் (யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), இரண்டாமிடம்- எஸ்.லிதுசன் (யா/புனித பரியோவான் கல்லூரி), மூன்றாமிடம்- யதூர்ஜா இந்திரகுமார் (யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்).

தரம் 8 மாணவர்களுக்கான பிரிவில் முதலாம் இடம்- சர்மிளா துஷ்யந்தன் (யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), இரண்டாமிடம்- யசிந்தா செல்வராசா (யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), மூன்றாமிடம்- கைலேங்கிரிநாதன் சுவேந்தன் (யா/ஊரெழு கணேசா வித்தியா சாலை).

தரம் 9 மாணவர்களுக்கான பிரிவில் முதலாம் இடம்- தாரணி தயாபரன் (யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), இரண்டாமிடம்- நிலக்ஷா ஜெகதீஸ்வரன் (யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), மூன்றாமிடம்- சத்திதா சிவனேஸ்வரன் (யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி).


தரம் 10 மாணவர்களுக்கான பிரிவில் முதலாமிடம்- தர்சிகா மகாலிங்கம், இரண்டாமிடம்- மயூரி அம்பலவாணர், மூன்றாமிடம்- நிரோஜா ஜெயபாலன் (இவர்கள் மூவரும் யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்தவர் கள்).

தரம் 11 மாணவர்களுக்கான பிரிவில் முதலாமிடம் - ஹம்சா சிவராசன் (யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்), இரண்டாமிடம்- தனுசியா நடராசா (யா/ஊரெழு கணேச வித்தியா சாலை), மூன்றாமிடம்- கயூசா சின்னராசா (யா/ஊரெழு கணேச வித்தியா சாலை).

தரம் 12, 13 மாணவர்களுக்கான போட்டியில் முதலாமிடம்- தமிழினி சிவலிங்கம் (யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி), இரண்டாமிடம்- தயாளினி குமாரசாமி, மூன்றாமிடம்- தர்சிகா மகாலிங்கம் (யா/வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்). (01)

## நல்லைக் கந்தன் மகோற்சவம்

### இன்று ஏழாம் நாள்



### பெருவாரி ஆன்மீகப் பேறு

ஒரு ரூபா உனக்குப் போதுமடா
ஓம் முருகா தனைக் கண்டு பசியாற
தருவான் வரம் அவரவர் நிலைபெறவே
எளிமையாய் வாருங்கள் நல்லூருக்கு!

குருவாக செல்லப்பா யோகர் சுவாமிகள்
கோடி சுகம் பெற்ற நல்லூரில்
பெருவாரி ஆன்மீகப் பேறு உண்டு
பட்டம் பதவிகள் தூசாமே!

உருவாகும் ஆசையைப் புறந் தள்ளி
உத்தமனாக வாழ விரும்பு
குருவாக முருகன் அருகில் வருவான்
குடிசையில் வாழும் பக்குவமிருந்தால்!

*- கே.எஸ்.சிவஞானராஜா, கொக்குவில்.*

### தேனினும் இனியவனே முருகா!

நல்லையில் உறைபவனே ஞான வடிவேலனே குமரா
நானிலம் போற்றிடும் தேனினும் இனியவனே முருகா
கல்லை யொத்த மனமும் கசிந்துருகக் காட்சி தந்தே
காதலுடன் நீ வந்து அருள் புரிவாய் குகனே
இல்லை யெனாது வரமீந்தருளும் முருகா முத்துக்குமரா
ஈசன் திருமகனே வள்ளி தெய்வானை மணாளனே
தொல்லை வினை தீர்க்க நீ ஓடோடி வருவாய்
தோத்தரித்தோம் உனையே காத்தருள வேண்டும் ஐயா!-

*சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்.*

## இன்றைய சிறப்பு நிகழ்ச்சிகள்

### நாவலர் மணி மண்டபத்தில்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்றுவரும் சிறப்பு நிகழ்ச்சித் தொடரில் இன்று இந்து தர்மாசிரியர் த.மனோஜ்குமார் "திருமுறை காட்டும் வாழ்வியல்" என்ற பொருளில் சொற்பொழிவாற்றுகிறார்.

மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகும் இன்றைய நிகழ்வின்போது ஏழாலை ஆத்மஜோதி அறநெறிப்பாடசாலை, சுன்னாகம் சொர்ணவரத காளி அம்பாள் அறநெறிப் பாடசாலை மற்றும் நாரந்தனை தான்தோன்றி மனோன்மணி அம்பாள் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் சிறப்பு அம்சங்களாக இடம்பெறவிருக்கின்றன. (க)

*********************************************

### துர்க்காதேவி மணி மண்டபத்தில்

நல்லூர் இளங்கலைஞர் மன்றம், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்து நடத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்ச்சித் தொடரில் இன்று திருமதி குமுதா உமாகாந்தன் வழங்கும் இன்னிசை இடம்பெறுகின்றது.

மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் இந்நிகழ்வின் போது கே.பத்மநாதன் (வயலின்), எஸ்.துரைராசா (மிருதங்கம்), ஏ.செல்வரத்தினம் (கடம்) ஆகியோர் பக்கவாத்தியம் வழங்குவார்கள். (க)

*********************************************

### நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில்

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வடக்கு வீதியில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடந்துவரும் தெய்வீகப் பேருரைத் தொடரில் இன்று கவிமணி அன்னைதாசன் "உதித்தனன் உலகமுய்ய" என்ற பொருளில் சொற்பொழிவாற்றுகிறார்.

மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வு சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் அமைப்பாளர் மதுரகவி எம்.பி. அருளானந்தன் தலைமையில் இடம்பெறும். (க)

# பொருளாதார தடைகளின் எதிரொலி: ஈரானில் கச்சா எண்ணெய் ஏற்றுமதி குறைந்தது

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஈரானுக்கு பொருளாதார தடை விதித்துள்ளதால், ஈரான் நாளொன்றுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பீப்பாய்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

உலகின் பல்வேறு நாடுகளுடன் பல கோடி மதிப்பிலான கச்சா எண்ணெய் ஏற்றுமதிக்கான ஒப்பந்தங்களை ஈரான் போட்டுள்ளது.

இந்நிலையில் அணு ஆயுதங்களை தயாரித்து வருவதாகக் கூறி, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஈரானுக்கு பொருளாதாரத் தடை விதித்துள்ளன. இது கடந்த 1ஆம் திகதி முதல் அமலுக்கு வந்துள்ளது. இதனால், ஈரானிலிருந்து கச்சா எண்ணெய் ஏற்றுமதி 40 சதவீதம் பாதிக்கப்பட்டுள்ளது.




நாளொன்றுக்கு 25 லட்சம் பீப்பாய்களாக இருந்த கச்சா எண்ணெய் ஏற்றுமதி, பொருளாதாரத் தடைக்குப் பிறகு 15 லட்சம் பீப்பாய்களாகக் குறைந்து உள்ளது. அதாவது, ஈரானிலிருந்து ஏற்றுமதியாகும் 90 சதவீத கச்சா எண்ணெய் டேங்கர்களுக்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் இன்சூரன்ஸ் வழங்கி வந்தன.

இப்போது அவை இன்சூரன்ஸ் வழங்குவதை நிறுத்திக் கொண்டதால் ஏற்கெனவே ஒப்பந்தம் போட்டுக் கொண்ட நாடுகளுக்கும் கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் தனது 47 கச்சா எண்ணெய் டேங்கர்களுக்கும் இன்சூரன்ஸ் செய்துதர ஈரான் முடிவு செய்துள்ளது.

எனினும் பொருளாதாரத் தடை என்பது நிதி நிறுவனங்களுக்கும் பொருந்தும் என்பதால், விபத்து ஏதேனும் ஏற்பட்டால் அதற்கான இழப்பீட்டை மற்ற நாடுகளுக்கு ஈரான் எப்படி வழங்கும் என்பது கேள்விக் குறியாக உள்ளது.

# உலக பார்வை

## இந்து வாலிபர் முஸ்லிமாக மதமாற்றம்: நேரடியாக ஒளிபரப்பியதால் பரபரப்பு



இந்து வாலிபர் ஒருவரை முஸ்லிம் மதத்துக்கு மாற்றும் நிகழ்ச்சி, பாகிஸ்தான் தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட் டுள்ளது.

பாகிஸ்தானில் வாழும் இந்துக்கள் கட்டாய மதமாற்றம் செய்யப்படுவதாகவும், குறிப்பாக இந்து பெண்களை கடத்தி கட்டாய மதமாற்றம் செய்து திருமணம் செய்வதாகவும் தொடர்ந்து புகார்கள் கூறப்படுகின்றன.

இந்நிலையில், இந்து வாலிபர் சுனில் என்பவரை முஸ்லிம் மதத்துக்கு மாற்றும் நிகழ்ச்சி ஏஆர்ஒய் டிவி சேனலில் நேரடி ஒளிரப்பு செய்யப்பட்டது. இதனால் சிறுபான்மை இந்துக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இதுகுறித்து பாகிஸ்தான் மனித உரிமை சேவகர் அன்சார் பர்னே கூறுகையில், மயா கான் என்பவரும் எனது சகோதரர் சரீம் பர்னேவும் சேர்ந்து, இந்து வாலிபர் சுனிலை முஸ்லிம் மதத்துக்கு மாற்றும் நிகழ்ச்சியை தொலைக்காட்சியில் நேரடியாக நடத்தி காட்டி உள்ளனர்.

இந்த மதமாதற்றம் ஒரு நாடகம். உண்மையிலேயே மதமாற்றத்துக்கு சுனில் விரும்பி இருந்தால், அதை நேரடியாக ஒளிபரப்ப வேண்டிய அவசியம் இல்லை. எனவே, எனது அன்சார் பர்னே அறக்கட்டளையில் இருந்து சகோதரர் சரீம் பர்னேவை நீக்கிவிட்டேன் என்று தெரிவித்துள்ளார்.

அன்சார் பர்னே நடத்தும் அறக கட்டளையில் பல ஆண்டுகளாக பணியாற்றி வருபவர்தான் சுனில். மதமாற்றம் செய்யும் போது தொலைக்காட்சி நேரடி நிகழ்ச்சியில் பொது மக்களும் பங்கேற்றுள்ளனர்.

மதமாற்றம் செய்த பின்னர், சுனிலுக்கு என்ன முஸ்லிம் பெயர் வைக்கலாம் என்றும் பார்வையாளர்களிடம் கருத்து கேட்கப்பட்டது. மேலும் முஸ்லிம்களின் புனித மாதமான ரம்ஜான் நோன்பு மாதத்தில் மதமாற்ற நிகழ்ச்சியை தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சிரியாவில் அலெப்பா நகரை கைப்பற்ற மோதல் தீவிரம்



சிரியாவின் வர்த்தக நகரமான அலெப்பாவை கைப்பற்ற அரசுப் படைகளுக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே சண்டை நடந்து வருகின்றது.

சிரியாவில் கடந்த சில நாட்களாக தலைநகர் டமாஸ்கஸ் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் இராணுவத்துக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே தொடர்ந்து சண்டை நடந்து வருகிறது.

போராட்டக்காரர்களை கொன்று குவிக்கும் சிரியா அரசு மீது பொருளாதார தடை விதிக்கும் தீர்மானம், ஐ.நா பாதுகாப்பு சபையில் கடந்த வாரம் கொண்டு வரப்பட்டது.

ஆனால் இந்த தீர்மானத்தை, ரஷ்யாவும், சீனாவும் ஏற்கவில்லை. சிரியாவின் எல்லைப் பகுதிகளில் போராட்டக்காரர்கள் கடந்த வாரம் 21 பாதுகாப்பு வீரர்களை சுட்டுக் கொன்றனர்.

இராணுவத்துக்கு எதிராக எரிமலை என்ற பெயரில் போராட்டத்தை நடத்தி வருவதாகவும், தங்கள் மீது இரசாயன ஆயுதங்களை உபயோகிக்க அரசு படைகள் முயற்சிப்பதாகவும் போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

போராட்டக்காரர்களின் ஆதிக்கம் உள்ள பகுதிகளை நோக்கி இரசாயன ஆயுதங்கள் எடுத்துச் செல்லப்படுவதாக வந்த தகவலின்படி, ரஷ்யாவும், அமெரிக்காவும் போராட்டக்காரர்கள் மீது இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தக் கூடாது என சிரிய அரசை எச்சரித்தன.

சிரியாவின் பாரம்பரிய நகரமாக யுனெஸ்கோவால் அங்கீகரிக்கபட்ட அலெப்போ நகரத்தை போராட்டக்காரர்கள் தங்கள் வசப்படுத்தியுள்ளனர்.

இங்கிருந்து அவர்களை விரட்டியடிக்க சிரிய இராணுவம் இந்த நகரை சுற்றி வளைத்து தாக்குதல் நடத்த தொடங்கி உள்ளது.

இந்த நகரில் ஏற்கனவே 2,000 கிளர்ச்சியாளர்கள் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். அரசு படைகளின் தாக்குதல் தொடங்கி உள்ளதால் இந்த நகரில் ஏராளமானவர்கள் பலியாவதற்கான ஆபத்துள்ளதாக அமெரிக்கா அச்சம் தெரிவித்துள்ளது.

# 1300 பொய் குற்றச்சாட்டு கடிதம் எழுதிய அதிகாரிக்கு 17 ஆண்டு தண்டனை

சீனாவில் உணவு மற்றும் மருந்து பொருள் நிர்வாக துறையில் துணை தலைவராக இருந்தவர் ஷாங் ஜிங்லி இவர் தனது துறை தலைமை அதிகாரி மீது 1300 பொய் குற்றச்சாட்டு கடிதங்கள் அனுப்பி அதன் மூலம் ஊழல் செய்துள்ளார்.

இவரின் இந்த ஊழலை வீடியோ ஆதாரத்துடன் பொலிசார் இதை நிருபித்தனர். எனவே இவர் மீது நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி குற்றம் சாட்டப்பட்ட ஷாங் ஜிங்லிக்கு 17 ஆண்டு சிறை தண்டனை விதித்து தீர்ப்பு கூறினார்.




சீனாவில் ஊழலுக்கெதிரான நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள் ளது. எனவே அது குறித்த தகவல் அறிக்கையில் இது வெளியிடபட்டுள்ளது.

கடந்த 2007ம் ஆண்டு முதல் சீனாவில் 6 லட்சம் அரசு ஊழியர்கள் மீது லஞ்ச ஊழல் வழக்கு பதிவு செய்யப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

அவர்களில் ஷாங் ஜிங்லிக்குதான் கூடுதல் தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

போலி மருந்து விற்பனைக்கு அனுமதி வழங்கியதற்காக கடந்த 2007ம் ஆண்டு உணவு மற்றும் மருந்து நிர்வாக துறையின் தலைவர் ஷெங்ஸியோயூ தூக்கிலிடப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



இலண்டனில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஐ,நா.பொது செயலாளர் பான்கி மூன் இலண்டனில் இங்கிலாந்தின் வெளியுறவுத்துறை அமைச்சர் உடன் இணைந்து பத்திரிகையாளர்களை சந்தித்தார்.

# ஹக்கானி ஒரு பயங்கரவாத அமைப்பு: அமெரிக்க செனட்டில் மசோதா நிறைவேற்றம்

ஹக்கானி அமைப்பை வெளிநாட்டு பயங்கரவாத இயக்கமாக அறிவிக்க வேண்டுமென, அமெரிக்க நாடாளுமன்ற செனட்டில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஹக்கானி அமைப்பு பயங்கரவாத இயக்கம் 2012 எனும் சட்டம் நாடாளுமன்ற பிரதிநிதிகள் 'சபை உறுப்பினர்களால் இந்த மாதத்தின் தொடக்கத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஹக்கானி அமைப்பை வெளிநாட்டு பயங்கரவாத இயக்கமாக அறிவித்து கடந்த ஆண்டே மசோதா நிறைவேற்றப்பட்டது. ஆனால் மசோதாவில் சில மாற்றங்களை பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களால் கொண்டு வந்தனர். இதையடுத்து மசோதா மீண்டும் செனட்டில் நிறைவேற்றப்பட்டது.

உளவுத்துறை தேர்வுக்குழுவின் தலைவர் மைக் ரோஜர்ஸ் கூறுகையில், நாடாளுமன்றத்தின் இரு அவை உறுப்பினர்களும் இந்த மசோதாவை ஒரு மனதாக நிறைவேற்றியுள்ளது பயங்கரவாதத்துக்கு எதிராக



எடுக்கப்பட்ட ஒரு சிறந்த நடவடிக்கையாக கருதப் படுகிறது என்றார்.

மேலும் ஆப்கானில் உள்ள வெளிநாட்டுப் படைகள் மீது பல்வேறு தாக்குதல் களை ஹக்கானி அமைப் பினர் நடத்தி வருகின்றனர். அத்துடன் ஆப்கான் இராணுவத்தினரையும், பொது மக்களையும் கொன்றும் துன்புறுத்தியும் வருகின்றனர்.

ஹக்கானி அமைப்பு மீது சரியான நடவடிக்கை எடுக்க இதுவே சரியான தருணம். வெறும் காகிதத்தில் கொண்டு வரப்பட்டதுடன் நின்று விடக்கூடாது, செயலிலும் காட்ட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

நிறைவேற்றப்பட்ட மசோதா தற்போது ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பார்வைக்கு அனுப்பப்பட்டுள்ளது. மசோதாவை சட்ட மாக்க ஜனாதிபதி உடனடியாகக் கையெழுத்திட வேண்டும் என்று உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கலவரம் ஓய்ந்தது: அசாமில் இயல்பு நிலை திரும்பியது



அசாம் மாநிலம் தற்போது கலவரத்திலிருந்து மீண்டு, இயல்பு நிலைக்கு திரும்பி வருகின்றது.

அசாம் மாநிலம் கோக்ரஜாரில் போடா பிரிவினருக்கும் சிறுபான்மையினருக்கும் இடையே வெடித்த கலவரத்தால் 5 மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

இக்கலவரத்தில் 50 பேர் கொல்லப்பட்டனர். 2 இலட்சம் பேர் வீடுகளை இழந்து, முகாம்களில் தங்க வைக்கப்பட்டனர்.

தொடர்ந்து 5 நாட்களாக வெடித்த இக்கலவரத்தால் மக்களின் அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. இதன்காரணமாக அசாம் மாநில பொலிஸார், துணை இராணுவம் என இருபிரிவினர் அம்மாநிலத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் நேற்று கலவரம் குறைந்திருந்தது. கோக்ரஜார், துப்ரி, போடாலாந்து மாவட்டங்களில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்டது.


**300 கோடி நிவாரண உதவி:** அசாம் கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்த பிரதமர் மன்மோகன் சிங், கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும், மக்களுக்காகவும் ரூ.300 கோடி ஒதுக்கப்பட்டதாக அறிவித்தார்.

ஏற்கனவே கலவரத்தில் கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ரூ.2 இலட்சமும் படுகாயமடைந்தவர்களுக்கு ரூ.50 ஆயிரமும் பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கலவரத்தில் வீடுகளை முழுமையாக இழந்தவர்களுக்கு ரூ.30 ஆயிரமும் ஓரளவு சேதமடைந்த வீடுகளுக்கு ரூ.20 ஆயிரமும் வழங்கப்படும் என அரசு அறிவித்துள்ளது.

# இந்திய செய்திகள்

## நித்தியானந்தாவின் தீவிர பக்தையாக மாறினார் கௌசல்யா



தமிழ் திரையுலகின் 1990ஆம் ஆண்டுகளில் முன்னணி நடிகையாக திகழ்ந்தவர் கௌசல்யா.

திருமலை, சந்தோஷ் சுப்ரமணியம் படங்களில் சிறு வேடங்களில் நடித்து வந்த இவர், தற்போது தொலைக்காட்சி தொடர்களில் நடித்து வருகிறார்.

இந்நிலையில் கௌசல்யாக்கு சமீபத்தில் முதுகு வலி ஏற்பட்டது. இதற்காக மருத்துவர்களிடம் சிகிச்சை பெற்றும் குணமாகவில்லை.

நித்யானந்தா ஆசிரமத்தில் ஹீலிங் தெரபி சிகிச்சை பெற்றால் வலி குணமாகிவிடும் என தோழிகள் ஆலோசனை கூறினர்.

இதையடுத்து நித்யானந்தா ஆசிரமத்துக்கு சென்று வலிக்கு சிகிச்சை பெற்று வருகிறார்.

ஹீலீங் தெரபி மூலம் நித்யானந்தா பல நோய்களை குணமாக்குவதாக அவரது சீடர்கள் தெரிவிக்கின்றனர். இது போல் பல்வேறு பிரச்சினைகளுடன் வந்து குணமானவர்கள் நித்யானந்தாவின் சீடராக மாறி உள்ளனர்.

தியானம், யோகா கற்று ஆசிரமத்திலேயே தங்கி விடுகிறார்கள். நடிகை ரஞ்சிதாவும் மன அமைதி தேடி ஆசிரமத்துக்கு சென்றார். பின்னர் நித்யானந்தா சீடராக மாறினார்.

கௌசல்யாவும் அவரைப் போல் நித்யானந்தாவின் பக்தையாக மாறியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

## பிரதமர் வீட்டின் மீது கல் வீச்சு



ஹசாரே ஆதரவாளர்கள் டில்லியில் நேற்று நடத்திய பேரணியின் போது, பிரதமர் மன்மோகன் சிங் வீட்டின் மீது, திடீரென கல் வீசித் தாக்குதல் நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது.

ஊழலை ஒழிக்க வலியுறுத்தி, அன்னா ஹசாரே ஆதரவாளர்கள், டில்லியில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், ஹசாரே ஆதரவாளர்கள் பலர், டில்லியில் நேற்று பேரணி நடத்தினர். இதில் சென்றவர்கள், திடீரென பிரதமர் மன்மோகன்சிங் வீட்டின் மீது கற்களை வீசி, தாக்குதல் நடத்தினர்.

மேலும், அவர்கள் கைகளில் வைத்திருந்த துண்டுப் பிரசுரங்களையும், வீட்டிற்குள் வீசியெறிந்து, ஊழலுக்கு எதிரான கோஷங்களை முழங்கினர். இதையடுத்து, பிரதமர் இல்லத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினர் விரைந்து வந்து, கல் வீச்சில் ஈடுபட்டவர்களை கைது செய்து அப்புறப்படுத்தினர். இந்தச் சம்பவத்தால், பிரதமர் இல்லம் அமைந்திருக்கும் பகுதியில் பதற்றம் ஏற்பட்டதால், ஏராளமான பொலிசார் குவிக்கப்பட்டனர்.



அசாமில் வன்முறையால் பாதிக்கப்பட்ட கோக்ராஜ்கர் மாவட்டம் பட்கான் கிராமத்திற்குச் சென்ற பிரதமர் மன்மோகன் சிங், அங்கு நிவாரண முகாமில் தங்கியிருப்பவர்களுக்கு ஆறுதல் கூறினார்.

## மாயாவதி சிலை உடைப்பால் உ.பி மாநிலத்தில் பதற்றம்



உத்திரப் பிரதேச மாநிலத்தின் முன்னாள் முதல்வரும், பகுஜன் சமாஜ் கட்சித் தலைவருமான மாயாவதி சிலையை மர்ம நபர்கள் சிலர் உடைத்து விட்டு சென்றிருப்பது அம்மாநிலத்தில் பதற்றமான சூழலை ஏற்படுத்தியுள்ளது.

தனது ஆட்சிக் காலத்தில் மாயாவதி, உத்திர பிரதேச மாநிலத்தின் பல்வேறு பகுதியில் தனது சிலையையும், தனது கட்சியின் சின்னமான யானை சிலையையும் நிறுவினார்.

இது குறித்து அரசியல் கட்சிகள் மாயாவதி, அரசு செலவில் இந்த சிலைகள் நிறுவியுள்ளார் என்றும் மக்கள் வரிப்பணத்தை விரயம் செய்கிறார் எனவும் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இந்நிலையில் மாயாவதியின் சிலை சேதப்படுத்தப்பட்டுள்ளது அம்மாநிலத்தில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாயாவதி தொண்டர்களுக்கும் இதர நபர்களுக்கும் மோதல் உருவாகாகமல் தடுக்கக் கூடுதலாக பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

## இந்தியாவில் தொழுநோயாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

### 2005இல் தொழுநோயாளிகள் இல்லாத நாடாக இந்தியாவிருந்தது



தொழுநோயாளிகள் இல்லாத நாடாக இந்தியா, கடந்த 2005-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டாலும் தற்போது உலகிலேயே இந்தியாவில் தொழுநோய் பாதித்தவர்களின் எண்ணிக்கை 55 சதவீதமாக உயர்ந்துள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் தொழுநோயாளிகளின் எண்ணிக்கை மெல்ல மெல்ல அதிகரித்து, இப்போது இந்தியா முழுவதும் இந்த நோய் பாதித்தவர்கள் எண்ணிக்கை 1 இலட்சத்து 26 ஆயிரத்து 800 ஆக உயர்ந்திருக்கிறது.

உலகம் முழுவதும் இதன் எண்ணிக்கை 2 இலட்சத்து 28 ஆயிரத்து 474-ஆக உள்ளது. இதன்படி பார்த்தால், உலகிலேயே இந்தியாவில் மட்டும் தொழுநோயால் 55 சதவீதம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ளத் தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றது.


இதுபற்றி, சர்வதேச தொழுநோய் ஒழிப்பு அமைப்பின் (ஐ.எல்.யு.) இந்தியாவுக்கான தலைவர் எஸ்.டி. கோகலே கூறுகையில், இந்தியாவில் தொழுநோயால் பாதித்தவர்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது.

இந்தத் தகவலை மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் உறுதி செய்துள்ளது.

எனவே, இந்தப் பிரச்சினையில் மத்திய மற்றும் மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் பெரும் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

ஏற்கெனவே உலக சுகாதார அமைப்பு இந்திய அரசை எச்சரிக்கை செய்து, தொழுநோயை ஒழிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நிர்பந்தித்துள்ளது என்றார்.

## அன்னா உண்ணா நோன்பு



அரசு தங்களுடைய கோரிக்கைகளை நான்கு நாட்களுக்குள் ஏற்கா விட்டால் தானும் உண்ணாவிரதம் இருப்பேன் என அன்னா அறிவித்திருந்தார்.

இதன் அடிப்படையில் நேற்று முதல் அன்னா ஹசாரேயும் உண்ணா விரதத்தில் களமிறங்குகின்றார்.

டெல்லி ஜந்தர் மந்தரில் இவர்களுடைய போராட்டம் தொடர்ந்து 3 நாட்களாக நடந்து வந்தது. இப்போராட்டத்தின் நேற்றைய நிலைமை மிகவும் மோசமாக இருந்ததாகக் கூறப்படுகிறது.

வெறும் 300 நபர்களே போராட்டத்தில் கலந்து கொண்டதாகவும் இதில் பெண் நிருபர் ஒருவர் மீது ஹசாரே குழுவினர் அத்துமீறியதாகவும் தகவல் வெளியானது.

ஜன லோக்பால் மற்றும் 15 மத்திய அமைச்சர்கள் மீதான ஊழல் குற்றசாட்டுகள் விசாரணைகளை தூண்டுவதற்காகவே இந்த உண்ணா விரதத்தை ஹசாரே குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலக குப்பைகளின் தலைநகரமாக இந்தியா

உலகிலேயே மிகப்பெரிய திறந்த வெளி கழிப்பறையாக இந்திய ரயில்வே விளங்குவதாக மத்திய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் கூறியுள்ளார்.

மேலும் உலகிலேயே குப்பைகளின் தலைநகராக இந்தியா விளங்குவதாகவும், இதற்காக நாம் வருத்தப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

நிகழ்ச்சியொன்றில் பேசிய அவர், ரயில்களிலும் ரயில் நிலையங்களிலும் நிலவும் சுகாதாரமின்மை குறித்து நாம் அனைவருக்கும் தெரியும். ஒரு நாளைக்கு 1.1 கோடி பேர் பயணிக்கும் ரயில்வே தான் உலகிலேயே மிகப் பெரிய திறந்தவெளி கழிப்பறையாக திகழ்கிறது.

மற்றவற்றின் கழிவு எல்லாமே வெளியே அப்படியே தான் வந்து விழுகிறது. இதில் ஆண்டு தோறும் புதிதாக 4,000 ரயில் பெட்டிகள் புதிதாக வேறு தயாரிக்கப்படுகின்றன.


விரைவில் பிரான்சிடமிருந்து 20 பில்லியன் டாலர் செலவில் 126 போர் விமானங்களை வாங்கவுள்ளோம். இதில் ஒரு விமானத்தின் பணத்தை செலவிட்டாலே 1,000 கிராமங்களை கழிப்பறை பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் எனச் சுட்டிக்காட்டினார்.

[illegible] சபை, யாழ்ப்பாணம்

# பல்கலையின் கரம் போட்டி: காமாட்சியம்பாள் சம்பியன்

வலிகாமம்

யாழ்ப்பாண பல்கலைக்கழக விளையாட்டு அவையும் பல்கலைக் கழககரம் அணியும் இனைந்து அழைக்கப்பட்ட விளை யாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான கரம் சுற்றுப் போட்டியில் வண்னை காமாட்சியம்பாள் சனசமூக நிலைய விளையாட்டுக்கழக அணி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டு மைதானத்தில் புதன் கிழமை 25 ஆம் திகதி இடம்பெற்ற இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி கரம் அணியும் வண்ணை காமாட்சியம்பாள் சனசமூக நிலைய கரம் அணியும் மோதிக்கொண்டன.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் மூன்று ஒற்றையர் சுற்றுக்களில் காமாட்சியம்பாள் சனசமூக விளையாட்டுக் கழக அணி 2:1 என்ற அடிப் படையில் வெற்றி பெற்றது.

முதல் ஒற்றையர் சுற்றில் காமாட்சியம்பாள் சனசமூக நிலைய அணியைச்சோந்த எஸ்.குமரேசனும் சென்ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.பிரவின்சனும் மோதிக்கொண்டார்கள்

ஆறு சுற்றுக்கள் வரை நீடித்த இந்தப் போட்டியில் குமரேசன் 25:05 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றார்.

இரண்டாவது ஒற்றையர் சுற்றில் காமாடசியம்பாள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எம்.சோபாநாத்தும் சென்ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த வி.துஷிகரனும் மோதிக் கொண்டார்கள்.

எட்டுச்சுற்றுக்கள் வரை நீடித்த இந்தப் போட்டியில சென்ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த துஷிகரன் 18:11 புள்ளிகள் என்ற அடிப்படையில வெற்றி பெற்றார்.

மூன்றாவது ஒற்றையர் சுற்றில் காமாட்சியம்பாள் விளையாட்டு கழகத்தைச் சேர்ந்த ஜெ.ஜெயகாந்தனும் சென்ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஆா.டீன்ஒஸ்வேட்டும் மோதிக் கொண்டார்கள்.

எட்டுச் சுற்றுக்கள் வரை நீடித்த இந்தப் போட்டியில் காமாட்சியம்பாள் விளையாட்டு கழகத்தைச் சேர்ந்த ஜெயகாந்தன் 25:12 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றார்

நான்காவது இரட்டையர் சுற்றில் காமாட்சியம்பாள் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த கே.குண தாஸ்ரிகாந்தனும் செனா.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஆர்.டீன் ஜெனிபேட் ஆா.லோகதீஸ்வரனும் மோதிக் கொண்டார்கள். எட்டுச் சுற்றுக்கள் வரை நீடித்த இந்தப் போட்டியில் காமாட்சியம் பாள் விளையாட்டுக் கழகம் 19:15 புள்ளிகள் என்ற அடிப்படையில் காமாட்சியம்பாள் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

ஆட்ட நிறைவில் காமாட்சியம்பாள் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் 3:1 செற் என்ற அடிப்டபடையில் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியை வெற்றி பெற்று சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.

# சங்காவின் விரல் முறிந்தது

இலங்கை - இந்திய அணிகளுக்கிடையில் கொழும்பு ஆர். பிரேமதாச விளையாட்டு மைதானத்தில் இன்று நடைபெற்ற 3ஆவது ஒருநாள் சர்வதேசப் போட்டியின்போது குமார் சங்கக்காரவின் வலதுகை விரலில் முறிவு ஏற்பட்டுள்ளது. விரலில் ஏற்பட்ட முறிவின் காரணமாக சங்கக்காரவினால் இந்த தொடரின் அடுத்த போட்டிகளில் பங்குபற்ற முடியாததுடன் மேலும் 6 வாரங்களுக்கு ஓய்விலிருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடி வந்த இலங்கை அணி சார்பாக சங்கக்கார 23 ஓட்டங்களைப் பெற்ற வேளையில் 15ஆவது ஓவரின் இறுதிப் பந்தினை அசோக் டின்டா வீசினார்.

மணித்தியாலத்திற்கு 140 கிலோமீற்றர் என்ற வேகத்தில் வந்த பந்து சங்கக் காரவின் வலதுகை விரலை பதம் பார்த்தது. உடனடியாக மருத்துவரை அழைத்து சிகிச்சை பெற்றுக் கொண்டதன் பின்னர் தனது ஆட்டத்தை தொடர்ந்தார் சங்கக்கார. 73 ஓட்டங்களை பெற்று ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பிய சங்கக்கார, கைவிரல் வலி தாங்கமுடியாமல் துடித்தபோது, அவரை பரிசோதித்த மருத்துவர் கைவிரலில் முறிவு ஏற்பட்டிருப்பதாக தெரிவித்தார். இதனால் எதிர்வரும் போட்டிகளில் விளையாட முடியாமல் போனதுடன் மேலும் 6 வாரங்களுக்கு ஓய்விலிருக்கும் படியும் சங்கக்கார பணிக்கப்பட்டிருக்கிறார்.

கைவிரலில் ஏற்பட்ட காயம் குணமடைந்து இலங்கையில் நடைபெறவுள்ள ருவென்ரி-20 உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றும் தகுதி சங்கக்காரவுக்கு கிடைக்குமா? என்ற கேள்வி நிலவுகிறது.

# தோற்றது சூதாட்டம்

ஒலிம்பிக் தீபத்தை யார் ஏற்றுவார்கள் என்பது ரகசியமாக வைக்கப்பட்டிருந்ததால், அது தொடர்பாக பெருமளவில் சூதாட்டம் நடைபெற்றது.

கடைசியாக 7 வீரர்கள் சேர்ந்து தீபத்தை ஏற்றினர். இது யாருமே எதிர்பாராதது என்பதால் சூதாட்டத் தரகர்கள் பணத்தை திரும்ப வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. படகுப் போட்டியில் 5 முறை தங்கம் வென்ற பிரிட்டனின் ஸ்டீவ் ரெட்கிரேவ் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றுவார் என்றுகூறி சூதாட்டம் நடைபெற்றது. ஆனால் அவர் ஒலிம்பிக் ஜோதியை மைதானத்திற்குள் எடுத்துச் சென்று ஜோதியை பிரிட்டனின் 7 தட கள வீரர்களிடம் ஒப்படைத்தார். அவர்[illegible] தீபத்தை ஏற்றினர்.

கடைசிக் கட்டத்தில் பிரிட்ட[illegible] முன்னாள் தடகள வீரரும், ஒ[illegible]பிக் சாதனையாளருமான ரோஜர் பேனிஸ்டர் ஜோதியை ஏற்றுவார் என்று சூதாட்டம் நடைபெற்றது. அதுவும் பொய்யாகவே பணத்தை திருப்பி வழங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர் சூதாட்டத் தரகர்கள்.

# முக்கோண சுற்றுக்கு தகுதி

வலிகாமம்

யாழ்ப்பாணம் சென்றல் விளையாட்டுக்கழகம் இரண்டாவது ஆண்டாக நடத்தும் 50 ஓவாகளுக்கு மட்டுப் படுத்திய முக்கோண கிரிக்கெட் போட்டியில் இம்முறை கடந்த கால போட்டிகளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகள் தெரிவு செய்யப்படடு மோதவுள்ளன.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி 59 புள்ளிகளைப் பெற்றும் யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 51.5 புள்ளிகளைப் பெற்றும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் 47 புள்ளிகளைப் பெற்றும் இந்த முக்கோணப் போட்டியில் விளையாட தகுதி பெற்றுள்ளன.

# ஒலிம்பிக்கில் முதல் தங்கம் சீனாவுக்கு



லண்டன் 2012 ஒலிம்பிக் போட்டிகளின் முதல் தங்கப் பதக்கத்தை சீனா வென்றுள்ளது.

மகளிருக்கான 10 மீற்றர் "ஏர் ரைஃபிள்" போட்டியில், 103.9 புள்ளிகள் எடுத்து யி ஸ்லிங் முதலிடத்தை பெற்று தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார். இப்போட்டியில் வெற்றி பெறுவார் என்று கருதப்பட்ட போலந்தின் சில்வியா பொகாச்கா 103.2 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

இதே போட்டியில் சீனாவின் யூ டான் வெண்கலப் பதக்கம் பெற்றார். போட்டியின் தகுதிச் சுற் றில் போலத்தின் வீராங்கணை 400க்கு 399 புள்ளிகள் எடுத்து முன்னிலையில் இருந்தார். எனினும் இறுதிப் போட்டியில் மொத்தமாக 502.9 புள்ளிகளை பெற்ற யி ஸ்லிங்குக்கு தங்கப் பதக்க மும், 502.2 புள்ளிகளை பெற்ற சில்வியாவுக்கு வெள்ளிப் பதக்கமும் கிடைத்தது.

# இந்தியாவை கண்மூடித்தனமாகப் பின்பற்றாதீர்கள்- இஷான்

இந்தியக் கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபையைக் கண்மூடித் தனமாகப் பின்பற்ற வேண்டாம் என சர்வதேசக் கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் இஷான் மணி - பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கு அறிவுறுத்தியுள்ளார். இந்திய - பாகிஸ்தான் கிரிக்கெட் தொடர் தொடர்பாகவே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடர் மீள ஆரம்பிப்பது சிறப்பானது எனத் தெரிவித்த இ'ான் மணி, உலகக் கிரிக்கெட் ரசிகர்கள் அனைவரும் அத்தொடரை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகத் தெரிவித்துள்ளார். அத்தோடு இரு நாடுகளுக்குமிடையிலான உறவுப்பாலமாகவும் இத்தொடர் அமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் அத்தொடருக்காக இந்தியக் கிரிக்கெட் சபையைப் பின் தொடர வேண்டிய அவசியம் கிடையாது என பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்குத் தெரிவித்துள்ளார். இந்தியக் கிரிக்கெட் சபை தெரிவித்ததை ஏற்றுக் கொண்டன் மூலம் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தனது சார்பிலான கருத்துக்களை முன்வைக் கத் தவறிவிட்டது எனத் தெ[illegible]ித்தார்.

இந்திய - பாகிஸ்தான் [illegible]ரின் மூலம் இந்தியக் கிரிக்கெ[illegible] சபை 100 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களை வருமானப் பெறவுள்ளது என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்த இஷான் மணி, இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையிடம் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை இலாபங்களில் பங்கு கேட்டிருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு இலாபங்களைப் பகிர பாகிஸ்தான் சபை கேட்டிருக்காதுவிடின் அடுத்த தொடரை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நடாத்துவதற்கு இந்தியக் கிரிக்கெட் சபையின் ஒப்புதலையாவது பெற்றிருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மாற்று ஆற்றலுடைய வீரர்களின் விளையாட்டுப்போட்டி

வலிகாமம்

வட மாகாண கல்வித் திணைக் களத்தினால் மாவட்ட மட்டத்திலான மாற்று ஆற்றலுடைய மாணவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் சனிக்கிழமை பகல் 9.15 மணிக்கு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் வட மாகாண பிரதி செயலாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபையின் செயலாளர் திருமதி ரமேஸ் விஜயலட்சுமி கலந்துகொண்டதுடன் சிறப்பு விருந்தினராக மேல் மாகாண சபையின் விசேட கல்விப் பணிப்பாளர் திசநாயக்கா பிலியந்தலை விசேட மாணவர் நிலைய பிரதி கல்விப் பணிப்பாளர் மாலினி குணசிங்கா வட மாகாண மாணவர் அபிவிருத்தி பிரதிப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டார்கள்.

யாழ் கல்வி வலய மாற்று ஆற்றலுடைய மாணவர்களின் "பாண்ட்" வாத்திய அணிவகுப்பைத் தொடர்ந்து வட மாகாணத்திற்கு உட்பட்ட 12 கல்விக் கோட்டங்களை சேர்ந்த பாடசாலைகளின் மாற்று ஆற்றலுடைய மாணவர்கள் அணிவகுத்து வந்தார்கள்.

இதனைத் தொடர்ந்து ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டு மாணவர்கள் உத்தியோகத்தர்களினால் சத்தியப் பிரமாணம் எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து விளையாட்டுப் போட்டியை பிரதம விருந்தினர் ஆரம்பித்து வைத்தார்.

# திலினி தோல்வி



ஒலிம்பிக் வற்மின்ரன் போட்டிகளில் இலங்கையின் திலினி ஜெயசிங்க முதல் போட்டியில் தோல்வியடைந்தார். நேற்று குழு "எம்" இடம்பெற்ற போட்டியில் தாய்வான் நாட்டு வீராங்கனை ஜசோதொன்னை எதிர்கொண்டார்.

இதில் 21:13, 21:05 எனும் புள்ளிகள் அடிப்படைணில் தோல்வியடைந்தார். 2ஆவது போட்டி இன்று நடைபெறுகின்றது.



யாழ் கல்வி வலய மாற்று ஆற்றலுடைய மாணவர்களின் விளையாட்டுப் போட்டிகள் சனிக்கிழமை துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றன. போட்டி நிகழ்வுகள் சிலவற்றின் நிழற் படங்களை இங்கே காணலாம்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 30.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது